விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 03 புதன்கிழமை (16.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# சர்வதேச விசாரணை குறித்து பிஸ்வால்-சொல்ஹெய்ம் பேச்சு

## இலங்கை குறித்து இருவரும் கரிசனை





(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை மீது சர்வதேச விசாரணைகளை கோரியுள்ளமை தொடர்பில் தெற்காசியாவுக்கான அமெரிக்க இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வாலும் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## மலே.பிரதமருடன் கோத்தபாய சந்திப்பு



(கோலாலம்பூர்)

மலேசியாவிற்கு விஜயம் செய்துள்ள பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அந்நாட்டுப் பிரதமர் நஜீப் ரசாக்கைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை கோலாலம்பூர் உலக வர்த்தக மையத்தில் ஆசியா பாதுகாப்பு சேவைகள்- 2014 மாநாட்டின்போது நடைபெற்றதாக மலேசியப் பிரதமர் அலுவலகம் தெரிவிக்கின்றது. பாதுகாப்பு செயலாளர் 20 ஆம் பக்கம் பார்க்க..

# பொதுநலவாய நிதியில் முறைகேடு கனடா மீது இலங்கை குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்புக்கான தமது சுயாதீன நிதிகளை கனடா அரசியலுக்கு பயன்படுத்துவதாக இலங்கை குற்றம் சுமத்தியுள்ளது. கனடா தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக பொதுநலவாயத்துக்கான சுயாதீன நிதிகளை கப்பமாக பயன்படுத்துவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் விடயத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை, பொதுநலவாய நாடுகள் அமைப்பின் இரண்டு வருட தவிசாளர் பதவியை வகிப்பதை ஆட்சேபித்து தமது சுயாதீன நிதிகளை கனடா நேற்று முன்தினம் நிறுத்தியது.

இந்தநிலையில் அறிக்கையை வெளியிட்டுள்ள இலங்கையின் வெளியுறவு அமைச்சு, கனடாவின் இந்த செயல்இலங்கையின் நல்லி 20 ஆம் பக்கம் பார்க்க..

# காணாமல் போன சிலர் குறித்து எந்தவொரு ஆதாரமும் இல்லை

## ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தில் காணாமல்போன சில மக்கள் பற்றி எந்த வித ஆதாரமும் கிடைக்கவில்லையென ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாசா இதுகுறித்து குறிப்பிடுகையில், சில முறைப்பாடுகளை விசாரணை செய்யும போது, அந்நபர்கள் எங்கே, எப்படி காணாமல் போனார்கள் என்பது குறித்த எந்தவித தகவலும் கிடைக்கவிலை. இது பாரிய பிரச்சினையாக உள்ளது. எனினும், அம்முறைப்பாடுகள் குறித்து நாம் தொடர்ந்தும் விசாரணை செய்து வருகின்றோம்.

காணாமல் போன நபர்களின் 19 ஆம் பக்கம் பார்க்க..

# சர்வதேச விசாரணைக்கான சாட்சியப்பதிவு ஆரம்பம் !

## பிரித்தானியா தெரிவிப்பு

(லண்டன்)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான சர்வதேச விசாரணையை ஆரம்பிக்கும் முகமான சாட்சியப்பதிவு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். இந்த தகவலை பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நவநீதம்பிள்ளையின் விசாரணையை பொறுத்தவரை, அதில், அனைத்து துறைசார்ந்தவர்களும் தகவல் மற்றும் சாட்சியப்பதிவு தொடர்பில் தெரிவு செய்யப்படுவர் என்று 20 ஆம் பக்கம் பார்க்க..

# முயற்சி செய்யுங்கள் நினைத்ததை அடையலாம்

## விஞ்ஞானச் சாதனையாளன் யாழில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மனதில் நினைப்பதை அடையும் வரை முயற்சிக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையில் அடைய முடியாது என்ற நினைப்பை தூர வைத்துக்கொள்ளுங்கள் என அமெரிக்காவின் வெள்ளை மாளிகையினால் வழங்கப்படும் உயர்விருதான 'மாற்றத்துக்கான சாதனையாளன்' விருதைக் கடந்த வருடம் பெற்றிருந்த ஈழத்து விஞ்ஞானியான 19 ஆம் பக்கம் பார்க்க..


# தமிழர்மீதான கெடுபிடி அரசியலை சிங்கள கட்சிகள் அறிய வேண்டும்

## பொன்சேகாவிடம் விளக்கினார் மனோ

(கொழும்பு)

தமிழர் மீதான புதிய கெடுபிடி அரசியல் முயற்சிகளை சிங்கள கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன; முன்னாள் இராணுவ தளபதியும், ஜனநாயக கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகாவிடம் எடுத்துரைத்துள்ளார்.

புலிகள் இயக்கம் மீண்டும் உயிர் பெறுகிறது என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கு, கொழும்பு ஆகிய பிராந்தியங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ள கைது நடவடிக்கைகள், புதிய கெடுபிடிகள் தொடர்பாக ஐ.ம.மு. தூதுக்குழு நேற்று ஜனநாயக கட்சியினரை சந்தித்து கலந்துரையாடியுள்ளது. கட்சி தலைவருடன் ஐ.ம.மு. பிரதி தலைவர் வேலணை வேணியன், உப செயலாளர் சண். குகவரதன், நிர்வாக செயலாளர் பிரியாணி குணரத்ன, இளைஞர் இணைய செயலாளர் நிரோஷ் ஜெயபிரகாசம் ஆகியோரும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.





ஜனநாயக கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐ.ம.மு. தலைவர் மனோ கணேசன் கூறியதாவது,

புதிய கெடுபிடி அரசியல்

புலிகள் மீண்டும் உயிர் பெற்று வருகிறார்கள் என்று கூறி தமிழ் மக்கள் மீது புதிய பொலிஸ்-படைத் 20 ஆம் பக்கம் பார்க்க..

Ranjanas
CERAMIC
For Quality Tiles & Sanitaryware
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
(C-7036)
SALE UP TO 30% OFF
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஊடகவியலாளர்மீது தாக்குதல் பல்வேறு தரப்பினரும் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டு தினமாகிய திங்கட்கிழமையன்று யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த உள்ளூர் செய்தியாளர் சிவஞானம் செல்வதீபனை அடையாளம் தெரியாதவர்கள் தாக்கியதை தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

அவரைத் தாக்கியவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும், யாழ் செய்தியாளர்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கும் பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கோரியிருக்கின்றது.

வடக்கில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத் தப்படுவதும், அவர்கள் தாக்கப்படுவதும் வழமையான நிகழ்வாகியிருக்கின்றது. இதனால் அங்கு ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது என தெரிவித்த இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் நடவாதிருப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளாார.

இதேவேளை ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு யாழ்ப்பாணம் ஊடக மையம், வட மாகாண சபை உறுப்பினர்களான பா. கஜதீபன், கே. என்.விந்தன் உட்பட பலர் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபனை வட மாகாண சபை உறுப்பினர்களான வே. சிவயோகன், க. சிவாஜிலிங்கம், பா. கஜதீபன், ச. சுகிர்தன் மற்றும் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் சதீஸ், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா. கிஷோர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (எ-11)

# மாமியாரின் மரண வீட்டில் மயங்கிய மருமகள் மரணம்

## கொடிகாமம் பகுதியில் சம்பவம்

(கொடிகாமம்)

மாமியாரின் இறுதிக்கிரியை நடைபெற்றவேளை மயங்கி விழுந்த மருமகள் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று கொடிகாமம் அல்லாரைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் சிவராஜா இராசம்மா (வயது 57) என்பவரே மயங்கிய நிலையில் மரணமானவராவார்.

மயங்கிய நிலையில் மரணமான இராசம்மாவின் கணவன் 2000ஆம் ஆண்டு கொடிகாமம் பகுதியில் எறிகணை வீச்சில் மரணமடைந்ததைத் தொடர்ந்து இராசம்மாவினையும் அவரது பிள்ளைகளையும் இராசம்மாவின் கணவரின் தாயார் பராமரித்து வந்துள்ளார்.

இவரின் பிள்ளைகள் வெளிநாட்டிற்குச் சென்றமையினால் அவர் வவுனியாவில் வாழ்ந்து வந்ததுடன் மாமியார் கொடிகாமத்தில் வசித்த நிலையில் நேற்று முன்தினம் இயற்கை மரணம் எய்தியுள்ளார்.

இதனையடுத்து மாமியாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக நேற்று வவுனியாவிலிருந்து வந்த இராசம்மா இறுதிக் கிரியைகளின் போது திடீரென மயக்கமுற்று விழுந்துள்ளார்.

உடனடியாக அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் இடைநடுவே அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மரண விசாரணை பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-11)

# 4 நாட்களில் 30 பேர் பலி

(கொழும்பு)

கடந்த 10 ஆம் திகதி முதல் புத்தாண்டு பிறக்கும் வரையில் 352 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அதில் 30 பேர் பலியாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜய வருட பிறப்பிற்கு முதல் நாளான ஏப்ரல் 13 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற 63 விபத்துகளில் ஏழுபேர் பலியாகியுள்ளனர் என்றும் அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியில் மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்கான விசேட செயற்றிட்டம் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த செயற்றிட்டத்தின் ஊடாக 14 ஆம் திகதி 780 சாரதிகளை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-11)

# புகையிரத நிலைய கிணற்றில் கிளைமோர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புகையிரத நிலைய வளாகக் கிணற்றுக்குள் இருந்து கிளைமோர்க் குண்டு ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது.


கிணற்றை சுத்தம் செய்யும் போதே குறித்த கிளைமோர்க் குண்டு மீட்கப் பட்டுள்ளது.

கிணற்றுக்குள் மேலும் பல குண்டுகள் மற்றும் வெடிக்காத பொருட்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் கிணற்றை துப்புரவு செய்யும் பணி தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து இராணுவத் தினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. படையினரே இனி கிணற்றினை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபடவுள்ளனர். (எ-11)

# தமிழரும் சிங்கள மக்களும் இணைந்து வாழவே முடியாது

## சீமான் தெரிவிப்பு



(சென்னை)

ஈழத்தில் தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை என நாம் தமிழர் கட்சி மாநில ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இலங்கையை நம் நட்பு நாடு என்று சொல்கிறது பாரதிய ஜனதா. இலங்கை நம் நட்பு நாடு. ராஜபக்ஷ நமது நண்பர் என்கிறது காங்கிரஸ் கட்சி. இலங்கை பகை நாடு என்று அறிவிக்க வேண்டும் என்கிறார் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா எனவே அதற்காகவே அவரை நாம் ஆதரிக்கின்றோம்.

ராஜபக்ஷ ஒரு போர் குற்றவாளி. அவரையும் அவருடைய சகாக்களையும் பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்தி உரிய தண்டனை வாங்கி தர வேண்டும் என்று ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று நட்புறவை துண்டிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து தீர்மானம் நிறைவேற்றி இருப்பவர் அம்மையார் ஜெயலலிதா. இதையெல்லாம் மனதில் கொண்டு நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

முள்ளிவாய்க்கால் முற்றத்தை இடித்து விட்டார்களே. அவர்களை போய் சீமான் ஆதரிக்கலாமா? என்று கேட்கிறார்கள்.

முள்ளிவாய்க்கால் முற்றத்தை இடித்து விட்டார்கள். அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறோம். சத்தியமாக அதை திருப்பி கட்டி விடுவோம். அதில் எந்த மாற்றமும் இல்லை.

அழிவின் விளிம்பில் இருக்கிற தமிழ் சமுதாயத்துக்கு ஒரே தீர்வு தனி ஈழ சோசலிச குடியரசு. இலங்கை ஒரு நாடு அல்ல. அங்கு தமிழர்களும், சிங்களவர்களும் வாழ்கிறார்கள். அவர்கள் இணைந்து வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை.

எனவே அங்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இலங்கையும் ஈழமும் பிரிய ஒரே வழி பொது வாக்கெடுப்புதான் என்று தீர்மானம் நிறைவேற்றிய இந்தியாவின் ஒரே தலைவர் ஜெயலலிதாதான்.

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில்தான் இலங்கையில் நடந்தது திட்டமிட்ட இனப் படுகொலை என்றும் அதற்கு ஒரே தீர்வு தனி ஈழம்தான். இந்த நிலைப்பாட்டை ஏற்கிறோம். அதனால் இரட்டை இலைக்கு வாக்கு கேட்கிறோம்.

ராஜீவ் காந்தி படுகொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் தூக்கு தண்டனையை நிறுத்தியவர் இந்த மாநில முதலமைச்சர் ஜெயலலிதா. தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர் சிறப்பு முகாம்களை மூட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# பொது பல சேனா ஒரு பயங்கரவாத அமைப்பு

## பகுப்பாய்வுக் கூட்டமைப்பு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இயங்கும் பௌத்த அமைப்பான பொது பல சேனா ஒரு "பயங்கரவாத அமைப்பு" என பயங்கரவாத ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு கூட்டமைப்பு என்ற அமைப்பினால் பெயரிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு கூட்டமைப்பு என்பது உலக நாடுகளில் அரசியல் வன்முறை தொடர்பில் ஆராய்ச்சி மற்றும பகுப்பாய்வு செய்யும் சர்வதேச நிபுணர்களை கொண்ட ஒரு ஆய்வு மையமாகும்.

பொது பல சேனா அமைப்பின் நடவடிக்கைகள் மென்மையான இலக்குகள் மீது பயங்கரவாத செயல்களை ஒத்ததாக இருக்கிறது. குறிப்பாக முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மக்கள் மீது வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதைக் குறிப்பிடலாம்.

சட்டபூர்வமாக அவ்வமைப்புக்களைப் பட்டியலிட முடியாது. ஆனால் நடவடிக்கைகளை ஆய்வு செய்வதன் மூலம் அறிக்கை வெளியிட முடியும் என பயங்கரவாத அமைப்பாக பெயரிட்டமைக்கான காரணத்தை அவ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (எ-11)

# கோபியின் தொலைபேசி குறித்து விரைவில் விசாரணை ஆரம்பம்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் என அடையாளப்படுத்தப்பட்ட கோபியின் தொலைபேசி விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளது.

அண்மையில் நெடுங்கேணி பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கோபி உள்ளிட்ட மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

எனினும் கோபி தொடர்பான விசாரணைகள் இன்னமும் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை.

கொல்லப்பட்ட ஏனைய இரண்டு முன்னாள் புலி உறுப்பினர்களினதும் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட உள்ளது.

தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பிலான தகவல்கள் திரட்டப்பட்டதன் பின்னர் விசாரணைகள் நடத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கோபியுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் சில நேரங்களில் கைது செய்யப்படக் கூடுமென அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


இதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 19 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும், 41பேர் தொடர்ந்தும் விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை டட்லி எதிர்த்தார்



## கரு ஜயசூரிய தெரிவிப்பு



**டட்லி சேனாநாயக்க தனது ஆட்சிக் காலத்தில் ஒருமுறை மாத்திரமே அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் தலைவரும் நாடாளு. மன்ற உறுப்பினருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

மக்களை அடக்குவதற்காக அவர் அதனை பயன்படுத்தவில்லை. மக்களின் உரிமைகளை வழங்குவதற்காக டட்லி சேனாநாயக்க அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தினார் எனவும் அவர் கூறினார்.

பொரளையில் நடைபெற்ற டட்லி சேனாநாயக்கவின் 41 ஆவது சிரார்த்த தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டட்லி சேனநாயக்க சலுகைகளுக்காக கொள்கைகளை காட்டிக் கொடுக்கும் வஞ்சக அரசியலில் ஈடுபடவில்லை.

தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டிய சந்தர்ப்பத்தில் முதலாளிமார் அதனை வழங்காததால், பிரதமராக இருந்த டட்லி, அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி தனியார் துறை ஊழியர்களின் உரிமையை பெற்றுக்கொடுத்தார்.

எனினும் அவசரகாலச் சட்டம் தற்போது இதற்கு முரணாக மககளை அடக்குவதற்காக பயன்படுததப்படுகிறது. நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்துவதை டட்லி எதிர்த்தார்.

டட்லி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை வகித்திருந்தால் மக்கள் ஒரு போதும அதனை மாற்றுமாறு கூறியிருக்கமாட்டார்கள்.

அரசியல்வாதி இன்றைய நாள் குறித்து சிந்தித்து செயற்படுவர் எனவும இராஜதந்திரி எதிர்கால சந்ததியை சிந்தித்து செயற்படுவர் எனறு ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி உள்ளது. டட்லி சேனாநாயக்கவை அப்ப டியான இராஜதந்திரியாக நான் காண்கின்றேன் எனவும் கரு ஜயசூரிய குறிப்பிட்டார். (2)

## இலங்கை விஜயத்தின் போது

# சிறில்ரம்போசா தென்னாபிரிக்க உப-ஜனாதிபதியாக இருப்பார்

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சுமாவினால் இலங்கை விவகாரங்களைக்கையாள்வதற்கான விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள சிறில் ரம்போசா இலங்கையில் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் சமரச முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் குறித்து ஆர்ராய்வதற்காக எதிர்வரும் மே மாதம் இறுதியில் பெரும்பாலும் கொழும்பு வருவார் எனத் தெரிகிறது.

தற்போது தென்னாபிரிக்காவை ஆளும் தேசிய காங்கிரஸின் துணைத்தலைவராக இருக்கும் சிறில் ரம்போசா இலங்கைக்கு விஜயம் செய்யும்போது பெரும்பாலும் தென்னாபிரிக்காவின் உப ஜனாதிபதியாகவும் இருப்பார் என விடயமறிந்த ஜொகன்னஸ்பர்க் வட்டாரங்கள் உறுதியாகத் தெரிவித்துள்ளன.

தென்னாபிரிக்காவின் தேசியப் பேரவைக்கான 400 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பொதுத் தேர்தல் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறுகின்றது.

இலங்கையைப் போல அங்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலேயே தேர்தல் நடைபெறும். தேசியப்பட்டியலில் இருந்து 200 உறுப்பினர்களும் மாகாணப் பட்டியலில் இருந்து 200 உறுப்பினர்களும் தேசியப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

பின்னர் தேசியப் பேரவை ஒன்று கூடி ஜனாதிபதி, உப ஜனாதிபதி பதவிக்குரியவர்களை தேர்ந்தெடுக்கும் 1994 இல் புதிய அரசமைப்பு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் நடைபெறும் 5ஆவது பொதுத் தேர்தல் இதுவாகும்.

இந்தத் தேர்தலிலும் ஆளும் தேசிய காங்கிரஸே பெரு வெற்றியீட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்பின்னர் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஜேக்கப் சுமா (வயது 72) மீண்டும் 3ஆவது தடவையாக அப்பதவிக்கு போட்டியிட்டு இலகுவாக வெற்றியீட்டுவார் என தென்னாபிரிக்கக் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

அவர் தமது உப ஜனாதிபதியாக சிறில் ரம்போசாவை வயது (62) களத்தில் இறக்க உத்தேசித்திருக்கின்றார் என்றும் உப ஜனாதிபதி பதவிக்கு மாத்திரமல்ல ஜேக்கப் சுமாவுக்குப் பின்னர் அடுத்த நிலையில் ஜனாதிபதி பதவிக்கு வரத்தகுதியானவர் என்ற ஸ்தானத்தைக் கட்சிக்குள் சிறில் ரம்போசா உறுதிப்படுத்தி வருகின்றார்.

தென்னாபிரிக்காவில் தற்போது தேர்தல் ஆரவாரங்கள் சூடுபிடித்திருக்கின்றன. அது அடங்கிய பின்னரே பெரும்பாலும் புதிய தேசியப் பேரவை பதவியேற்று ஜனாதிபதி, உப ஜனாதிபதி தேர்வுகள் முடிவடைந்து அவர்களும் பதவி யேற்ற பின்னரே சிறில் ரம்போசா இலங்கைக்கு வருவார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (2-6)

# பேஸ்புக் ஊடாக சிறுவர்கள் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு

பேஸ்புக் சமூக வலைத்தளம் ஊடாக சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுதல் நாட்டில் அதிகரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கின்றது.

கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க குறிப்பிட்டார்.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் இருவர் சந்தேகத்தின் பேரில் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டவர்களால் கடந்த காலங்களில் இவ்வாறான குற்றங்கள் இழைக்கப்பட்டபோதிலும், தற்போது இலங்கையர்களே அதிகளவில் குற்றங்களில் ஈடுபடுவதாக சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க மேலும் சுட்டிக்காட்டினார்.

2013 ஆம் ஆண்டின் இறுதியில், நூற்றுக்கு 10 பேர் இணையத்தள பாவனையாளர்கள் என மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2012 ஆம்ஆண்டுடன்ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் இணையத்தள இணைப்புகளின் எண்ணிக்கை 47 வீதத்தால் அதிகரித்துள்ளது.

பொதுவாக கையடக்க தொலைபேசிகள் ஊடான இணையப் பாவனையே இதற்கு ஏதுவாக அமைந்துள ளது என்று அவ்வறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இத்தகைய துஷ்பிரயோகங்களை காரணமாக வைத்த சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கான முனைப்பில அரசாங்கம் ஈடுபடலாம் என்ற ஐயமும் எழுந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமூக வலைத்தளங்களினூடாக அரசாங்கத்திற்கும் குறிப்பாக மகிந்த சகோதரர்களுக்கு எதிரான கடுமையான விமர்சனங்கள், அம்பலப்படுத்தல்கள் தொடர்வதனாலும், சமூக வலைத்தளங்களை அரசாங்கம் கட்டுப்படுத்த முனைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (2)

## இன்றைய இராசி பலன்

**16.04.2014**

**(சித்திரை 03, புதன்கிழமை)**

**பிரதமை பிற்பகல் 1.25 மணிவரை**

**சுவாதி முன்னிரவு 11.44 மணிவரை**

**இராகுகாலம் 12.04-01.34 மணிவரை**

**சுபநேரம் 4.34-6.04 மணிவரை**

வளவன்

**மீனம்** வரவும் செலவும் சமமமாகும், எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மேடம்** பொன்னான நாள், பொருள் வரவிற்கு அஸ்திவாரமிடுவீர்கள், உடல்நலம் சீராகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், மகிழ்ச்சிக்குரிய செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் சம்பந்தமாக புதிய தீர்மானங்கள் எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்புகளும் அறிவுரையும் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கும்பம்** தொழில் சம்பந்தமாக முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், பயணங்களால் ஆதாயம் கிடைக்கும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், மனக்குழப்பங்கள் அகலும்.

**கடகம்** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்** செலவிற்கேற்ப வருமானம் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**சிம்மம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, கௌரவம், அந்தஸ்து உயரும்.

**விருச்சிகம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சுப [illegible] அதிகரிக்கும், பயணங்களால் மன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**துலாம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது, போசன சுகமுண்டு.

**கன்னி** திறமைமிக்கவர்களின் ஒத்துழைப்போடு தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், பணப் புழக்கம் அதி கரிக்கும், வாக்கு மேன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதாட்டியின் சங்கிலி அறுக்க முயன்ற ஐவர் கைது

மூதாட்டி ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுப்பதற்கு முயன்ற மூவர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் யாழ். பண்டத்தரிப்பு வடலியடைப்பு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருதாவது,


குறித்த மூதாட்டி வடலியடைப்பு பகுதியில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் எதிரே வந்த மூவர் சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளனர்.

இதேவேளை, மூதாட்டி பல சிரமத்தின் மத்தியில் போராடி தனது சங்கிலியை காப்பாற்றியுள்ளார்.

அவரின் அலறல் சத்தத்தினையடுத்து பொதுமக்கள் அங்கு கூடிய போது அச் சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர்.

இந்நிலையில் அவ்விடத்தில் நின்ற ஒருவர் சந்தேக நபரின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை பதிவு செய்து பொலிஸ் நிலையத்திற்கு வழங்கியதையடுத்தே இச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-23)




# ஒலிபெருக்கியை நிறுத்திய இளைஞன் மீது கத்திக்குத்து

(கரணவாய்)

புத்தாண்டு தினத்தன்று நடபெற்ற கரப்பந்தாட்ட விளையாட்டு போட்டி நிகழ்வில் இருவருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் இளைஞன் ஒருவன் கத்திக்குத்துக்கு இலக்காகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.




இச் சம்பவம் நேற்று முன்தினம் கரணவாய் தெற்கு முதலைக்குளி விளையாட்டு மைதானத்தில் இரவு 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் கரணவாய் தெற்கை சேர்ந்த இ.நிமல்சன் (வயது 24) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது குறித்த இளைஞன் ஒலிபெருக்கியை நிறுத்தியுள்ளான். இதனால் கோபமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் குறித்த இளைஞனின் கைகளை கத்தியால் குத்தி விட்டு அவ்விடத்தை விட்டு தப்பியோடி உள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-60)

# சைவப்புலவர் தேர்வு 18 ஆம்திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத் தப்படும் சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகள் எதிர்வரும் நாளை மறுதினம் வெள்ளிக் கி ழமை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையிலான மூன்று தினங்கள் மட்ட க்களப்பு, திருகோணமலை, கொழும்பு, யாழ் ப்பாணம், லண்டன் ஆகிய இடங்களில் நடை பெறவுள்ளன என சைவப் புலவர் சங்க தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகள் கொழும்பில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும் யாழ்ப்பாணத்தில் நாவலர் மகாவித்தியாலயத்திலும் மட்டக்களப்பில் ஆனைப்பந்தி பெண்கள் மகா வித்தியாலயத்திலும் திருகோண மலை யில் கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் லண்டனில் சைவ முன்னேற்றச் சங்கத்திலும் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு தேர்வுச் செயலாளரின் 077 749 7100 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பித்தவர்களுக்குரிய நுழைவுச் சீட்டுக்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

இதுவரையில் கிடைக்காதவர்களும் நேரில் பரீட்சை நிலையங்களுக்கு சென்று நுழைவுச்சீட்டுப்பிரதியைப் பெற்றுத் தேர்வு எழுத முடியும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மணவாளக்கோல விழா

(கொடிகாமம்)

தெல்லிப்பழை கட்டுவான் ஸ்ரீ ஐயப்ப சுவாமி தேவஸ்தானத்தின் மணவாளக்கோல விழா நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆலயத்தின் பிரதிட்டா பிரதமகுரு சிவஸ்ரீ சி.அருணாச்சலக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் 1008 கலச சங்குகள் அபிஷேகத்திற்காக வைக்கப்பட்டு சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இதன்போது விசேட அலங்காரத்துடன் ஐயப்ப சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார்.

இவ் ஆலயம் அகில இலங்கை சபரி கிரி ஐயப்ப சுவாமி பீடத்தின் ஒரு முக்கிய தலமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-272)

# சீரான போக்குவரத்திற்கு வீதியை புனரமையுங்கள்

## சம்பந்தப்பட்டவர்களுக்கு மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

யாழ்.செம்மணி கல்வியங்காட்டிற்கு செல்லும் பிரதான வீதி நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமையால் வீதிப் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் சீரான போக்குவரத்தை மேற்கொள்ள முடியவில்லை என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பல தடவைகள் அறிவுறுத்தியும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

மழை காலம் நெருங்குவதால் வீதியின் குழிகள் மழை நீர் தேங்கி நிற்கும். ஆதலால் சீரான போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது எனவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனமெடுத்து வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது. (2-29)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் ஆலயத்தின் மஹோற்சவத் திருவிழா இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய, எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை மாலை வேட்டைத்திருவிழாவும், இரவு சப்பறத்திருவிழாவும் நடைபெறும்.

மறுநாள்வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தியாகராஜபெருமான் சித்திரத் தேரில் ஆரோகணித்து வலம் வந்து அருள்பாலிப்பார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை10 மணிக்கு தீர்த்த உற்சவமும் மறு நாள் சனிக்கிழமை இரவு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)



சொண்ட் அரச சார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் நீர்வேலி வடக்கு விவசாய சம்மேளனத்தின் ஆதரவில் சேதன முறை மாதிரி பண்ணை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதன் போது வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் விவசாய பண்ணையினை திறந்து வைப்பதையும் புதிய நவீன விவசாய பயிர்ச் செய்கை முறை பற்றி அமைச்சருக்கு விவசாய ஆலோசகர் திருமதி அஜந்தா விளக்குவதையும் அமையப் பெற்ற பண்ணையினையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக சேவைகள் திணைக்களம்- வடமாகாணம்

### பெறுகைகளுக்கான அழைப்பு

**கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான புதிய உலர் உணவு, பால் மற்றும் தொற்று நீக்கி பொருட்கள் விநியோகம்-2014/15**

1. வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த புதிய உலர் உணவு, பால் மற்றும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகத்தர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

2. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகம் தொடர்பில் வியாபாரப் பெயர் பதிவினை உடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.விலைமனுதாரர் கேள்விகோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனங்களுக்கான உணவு வழங்கல் சேவையில் மூன்று (03) வருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.பொருத்தமான கேள்வி வைப்புப் பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06. கேள்வி சமர்ப்பிப்பில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத் திணைக்களத்தில் கிடைக்கும் **Application for Bid Documents** என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1,000 காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 17.04.2014 தொடக்கம் 08.05.2014 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலும் 30.04.2014 காலை 10.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக்கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கெள்ளலாம்.

7. **"Diet Supply- 2014/15, Elders Home , Kaithady Reference No NP/24/2/3/02/2014-15"** என்ற விபரம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

8. விலைக்கேள்விகள் 09.05.2014 ஆம் திகதி 13.30 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத்திணைக்கள பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் இடுவதன் மூலம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 09.05.2014 ஆம் திகதி 14.00 மணிக்கு திறக்கப்படும்.

9. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.

10.கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வுதற்கு பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

*ந.இன்பராஜ்*
*தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு, சமூகசேவைகள் திணைக்களம்,வ.மா.*
(சி-7029) *கண்டிவீதி, கைதடி. தொலைபேசி: 021 3202464*
*தொலைநகல்: 0217539145 மின்னஞ்சல்: socialnp@sltnet.lk*

# சட்டத்தை அனைவருக்கும் சமமாக அமுல்படுத்த வேண்டும்

## ஹெல உறுமய கட்சி வலியுறுத்து

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது. வில்பத்து வன விலங்கு சரணாலய பகுதியில் முஸ்லிம்கள் சட்ட விரோதமான முறையில் குடியேற்றப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கைக்கு எதிராக வழக்குத் தொடர்பான ஆரம்ப கட்டப் பணிகள் பூர்த்தியாகியுள்ளதென தெரிவித்துள்ளார்.முஸ்லிம் மக்கள் சட்ட ரீதியாக வடக்கில் மீள் குடியேற்றப்பட வேண்டுமே தவிர, வில்பத்து சரணாலயத்தில் குடியேற்றப்படக் கூடாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கட்சி, இன, மத பேதங்களைக்களைந்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.சட்டம் அனைவருக்கும் சமமான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (2)

## இலங்கை அகதிகள் இரு நாட்கள் வெளியே செல்லத்தடை

சோனியா காந்தியின் தமிழ்நாட்டு வருகையை முன்னிட்டு பெருமாள்புர முகாமில் உள்ள இலங்கை அகதிகளை 2 நாட்களுக்கு வெளியில் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தமிழகத்தில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்யும் விதமாக இன்று புதன்கிழமை காலை கன்னியாகுமரிக்கு செல்லவுள்ளார்.

இதையடுத்து கன்னியாகுமரி நகரம் முழுவதும் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொணடு வரப்பட்டுள்ளது. சுற்றுலா வாகனங்கள் தீவிர சோதனைக்குப் பின்னரே அனுமதிக்கப்படுகின்றன.

இதுதவிர அனைத்து தனியார் தங்கும் விடுதிகளிலும் தங்கியிருப்போர் பட்டியல் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

பெருமாள் புரத்தில் அமைந்துள்ள இலங்கை அகதிகள் முகாமில் 210 குடும்பத்தினர் வசித்து வருகின்றமை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## இந்திய துணைத்தூதரகம் யாழ்ப்பாணம் ITEC Day

யாழ்.இந்தியத் துணைத்தூதரகமானது இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான நாள் (ITEC Day) ஒன்றுகூடல் நிகழ்வை 26 ஏப்ரல் 2014 அன்று தூதரக வளாகத்தில் நடத்தவுள்ளது. இவ் ஒன்றுகூடல் நிகழ்விற்கு ITEC பயிற்சித் திட்டத்தின் கீழ் வடமாகாணத்திலிருந்து இந்தியாவில் தமது பயிற்சி நெறிகளை மேற்கொண்டவர்கள் அழைக்கப்படுகின்றனர். மேலும் வடமாகாணத்திலிருந்து TCS கொழும்பு திட்டத்தின் கீழ் இந்தியாவில் தமது பயிற்சிகளை மேற்கொண்டவர்களும் இந்திய பல்கலைக்கழகங்களில் தமது பட்டப் படிப்பு/ பட்டமேற்படிப்ப/ கலாநிதிப் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்தவர்களும் மேற்படி பட்டக் கல்வியை புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கற்றவர்களும் இவ் ஒன்று கூடல் நிகழ்விற்கு அழைக்கப்படுகின்றனர். இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தமது பெயர், கற்கைநெறிக்கான விபரம் மற்றும் தங்களுடனான தொடர்புகளுக்கான விபரம் என்பவற்றை cgi.jaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 23 ஏப்ரல் 2014 இதற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

(கு-7032) **இந்திய துணைத்தூதரகம் இல.14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொடர்பு இல. 021 222 0504/5**
**இணையத்தள முகவரி:www.cgijaffna.org**

## சமூக சேவைகள் திணைக்களம்- வடமாகாணம்

### பெறுகைகளுக்கான அழைப்பு

**கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக்கொள்ளல்-2014/15**

1. வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமைவாய்ந்த சுத்திகரிப்பு சேவைகள் வழங்குநரிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளை கோருகின்றார்.

2. விலைக்கேள்விதாரர் சுத்திகரிப்பு சேவை தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.விலைமனுதாரர் கேள்விகோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான சேவை வழங்கல் தொடர்பில் மூன்று (03) வருடத்திற்கு குறையாத முன்அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.பொருத்தமான கேள்வி வைப்புப் பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. தகுதிவாய்ந்த மாற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் **Application for Bid Documents** என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1,000 காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 17.04.2014 தொடக்கம் 05.05.2014 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

7. **Cleaning Service- 2014/15, Elders Home , Kaithady Reference No NP/24/2/3/02/2014-15** என்ற விபரம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. விலைக்கேள்விகள் 06.05.2014 ஆம் திகதி 13.30 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத்திணைக்களத்தில் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 06.05.2014 ஆம் திகதி 14.00 மணிக்கு திறக்கப்படும்.

9. எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.

10.கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

*ந.இன்பராஜ்*
*தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு, சமூகசேவைகள் திணைக்களம்,வ.மா.*
*கண்டிவீதி, கைதடி தொலைபேசி: 021 3202464*
*தொலைநகல்: 0217539145 மின்னஞ்சல்: socialnp@sltnet.lk* (சி-7029)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 30.75 செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L, கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர்<br>தொ.இ: B/1297 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 54 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L / தாதி உத்தியோகம்<br>தொ.இ: G/1862 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 18 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/1300 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 24 உயரம்: 156 cm<br>தகைமை/தொழில்: HNDA / அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/1863 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 26 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/1305 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 27 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, BSc / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/1867 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 50.5<br>தகைமை/தொழில்: A/L / விவசாயம்<br>தொ.இ: B/1306 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 57.25 செவ் 7இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, நூலக விஞ்ஞானம்<br>தொ.இ: G/1870 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 80 |
| தக்காளி | 40 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 40 | 20 | 40 |
| கரட் | 80 | 60 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 25 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 60-90 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 60 |
| பாகற்காய் | 200 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | – |
| பயற்றங்காய் | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 80 | 200 | 120 |
| போஞ்சி | – | 100 | – |
| கத்தரிதம்புள்ள | – | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 |
| இராசவள்ளி | 70 | 100 | 100 |

# நிரந்தர சமாதானம் உருவாக சர்வதேச மத்தியஸ்தம் அவசியம்

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

இந்த நாட்டில் நிரந்தரமான ஒரு சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசாங்கம் பேச வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துளளார்.

அம்பிளாந்துறையில் இடம்பெற்ற ஊஞ்சல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ், சிங்கள புத்தாண்டில் வருடந்தோறும் நாங்கள் மருத்துநீர் தேய்க்கின்றோம். ஆலயங்களுக்கு செல்கின்றோம். புத்தாடை அணிகின்றோம்.

ஆனால் நிரந்தரமான ஒரு சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால் ஜனாதிபதி இன்றைய 2014 தமிழ் ,சிங்கள புத்தாண்டிலே கூறிய நிரந்தர சாந்தியும் சமாதானமும் திகழ வேண்டுமாக இருந்தால் நான் ஜனாதிபதியிடம் ஒரு செய்தியை இன்றைய நாளில் கூறுகின்றேன். அதை ஒரு வேண்டுகோளாகவும் விடுக்கின்றேன் இந்த இலங்கைத்திருநாட்டிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நிச்சயமாக சர்வதேச மத்தியஸ்தத்துடன் அரசாங்கம் பேசுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும்.

நிச்சயமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசாங்கம் பேசினால் மாத்திரமே ஜனாதிபதி கூறுகின்ற சாந்தி சமாதானமாக இருக்கலாம். அல்லது வேறுயாரும் கூறுகின்ற சாந்தி சமாதானம் இந்த நாட்டிற்கு வரும் என்கின்ற செய்தியை கூறிவைக்க விரும்புகின்றேன்.

ஏனென்றால் தொடர்ச்சியாக இன்னல்பட்டு அடிமைப்பட்டுக் கொணடிருக்கின்ற இனம் நாங்கள். எங்களுக்கு விமோசனம் தேவை என்றார்.

தற்போதைய சந்ததியில் பாரம்பரிய பண்பாட்டு விழுமியாங்களை தமிழர் மரபில் இருந்து அழியாமல் பாதுகாக்க சித்திரைப் புதுவருடமும் வழிவகுக்கின்றது.

அன்று அம்பிளாந்துறையை ஆட்சி செய்த சிற்றரசன் அருமைக குட்டிப்போடியார் இன் 1776 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து ஊஞ்சல் கட்டி ஆடிய நிழல் வாகை மரமான இம்மரம் இருந்ததாக வரலாறு கூறுகின்றது என்றார்.(2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சித்த மருத்துவ அடிப்படையில் நீரின் உபயோகங்களும் சுகாதாரமும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

குளத்தைச்சுற்றி மரஞ்செடிகள் பயிரிடுகின்றார்கள். இது கண்டிக்கத்தக்கது. இம்மரங்களிலிருந்தும் விழும் இலை, சருகு முதலியன அழுகி நீரில் கிருமிகளை உண்டாக்கும். ஆனால் குளம், ஏரி முதலிய நீர்நிலைகளின் கரையில் பனை, தென்னை முதலிய நீண்ட உயரமுள்ள மரங்களை பயிரிடலாம். சில நன்மைகளும் உண்டு.

ஏனெனில் இம்மரங்கள் மற்றைய மரங்களைப்போல அடர்ந்து வளருவனவல்ல. ஆனால் இலைகள் சூரிய, சந்திர கிரணங்களை தடுப்பதில்லை. அன்றியும் இவற்றிலிருந்து இலைகளும் உதிரா. பனையோலைகளும் தென்னை ஓலைகளும் ஏதோ சில காலங்களில் மரத்தினடியிலேயே விழுவதுண்டு. ஆயினும் அவை காற்றால் எளிதில் அதிரப் பெற்று நீரில் விழும் தன்மையுடையன அல்ல. குளக்கரைகளின் கீழ் தேற்றா, நெல்லி, கடுக்காய், தான்றிக்காய் ஆகிய மரங்களை வளர்க்கலாம். இலைகளின் வேர் ஊறிய நீரும் காய்கள் ஊறிய நீரும் உடலுக்கு நன்மை தரும்.



மாசுள்ள குளங்களில் மூழ்குபவர்களுக்கு தேககட்டு கெட்டு விடும். விக்கல், வாத கபநோய்கள் வாந்தி, குளிர், இருமல், குன்மம் (வயிற்றுப்புண்) முதலிய நோய்கள் உண்டாகும். இதனை,

குளத்துநீர் தானே கொடிதான வாதம்

வளர்த்திவிடு மப்பால் மதுவாங்-குளிர்ச்சியையு

மெத்தவுண்டாக்குமென மேதினியோர் தங்களுக்குக் கொத்தவரும் பூங்குழலாய் கூறு

தாமரைநிறைந்த குளத்தின்நீரால் வாத, பித்த தோஷங்கள் விருத்தியாகும். புராதன வெப்பு நோய், அதிதாபம் ஆகிய நோய்களுண்டாகும் என்பதை,

தண்டா மரைக் குளத்தில் தங்கு புலைதனால்

உண்டாகும் வாதபித்த முண்மையே- பண்டான

வெக்கைநோய் மாறாது வீறுந்தபனமு மா

மைக்கருங்கண்மாதேவழுத்து

இனி அல்லிக்குளத்து நீரும் அருந்துவதற்கு ஆனது. அதனால் செரியாமை, சொறி, சிரங்கு, வெப்பு, தாது நட்டம், வாய்ப்புண் ஆகியன உண்டாகும். இதனை,

அல்லிக் குளத்தினீர்க்கக் கினிமந் தப்பேதி

மெல்லச் சொறிசிரங்கு வெப்புடனே- தொல்லுலகில்

தாலுதனி லட்சரமும் தாதுநட்டமுங்கொடுக்குங்

கோல மலர்த்திருவே கூறு

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

அதிக குளிர்ச்சியுள்ள குளத்து நீரினை அருந்தக் கூடாது. முற்கூறியவற்றிலிருந்தும் பொதுவாக குளத்துநீரே மக்கள் உபயோகத்திற்கு அவ்வளவு சிறந்தது அன்று என்றும் விளங்குகிறது.

(தொடரும்)



நுணாவில் மேற்கு வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்ற போது...

(படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை.இளைஞர்களை சீரழிக்க இராணுவத்தினர் முனைகின்றனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட இளைஞர், யுவதிகளிடையே இராணுவத்தினரால் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு பியர் போத்தல்களை பரிசாக வழங்கியமைக்கு மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புத்தாண்டை முன்னிட்டு முல்லைத்தீவு பிரதேசத்தின் 591 ஆவது படைப் பிரிவினரின் ஏற்பாட்டில் விளையாட்டுப் போட்டிகள் கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டன.

அன்றைய தினமே வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிலையில் படகுப் போட்டியில் வெற்றி பெற்ற இளைஞர்களுக்கு பியர் போத்தல்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

முதலாம் இடத்தைப் பெற்றவருக்கு 26, இரண்டாம் இடத்தை பெற்றவருக்கு 18 போத்தல்கள் என்ற அடிப்படையில் முதல் மூன்றி டங்களைப் பெற்ற இளைஞர்களுக்கு இராணுவத்தினர் பியர் போத்தல்களை பரிசாக வழங்கியுள்ளனர்.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இச் செயற்பாடு முல்லை.மாவட்ட மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வீரர்களுக்கு பரிசாக வழங்குவதற்கு எவ்வளவோ பொருட்கள் உள்ள போதிலும், பியர் போத்தல்கள் வழங்கப்பட்டமையானது கலாசாரத்தையும் இளைஞர்களையும் சீரழிக்கும் செயல் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2010, 2011,2013 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற புத்தாண்டு நிகழ்வுகளில் இவ்வாறான அநாகரிக செயற்பாடுகள் இடம்பெறவில்லையெனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்தோடு இனிவரும் காலங்களில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் நிகழ்வுகளில் சமூகத்திற்கு ஒவ்வாத பரிசுப் பொருட்களை வழங்குவதைத் தடுக்க முல்லை. மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென முல்லை.மாவட்ட மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-267)

# விபரங்கள் திரட்டல்

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சீர்திருத்தச் சபைகளினதும் கிறிஸ்தவ மதகுருமார்களினதும் சுயவிபரங்கள் திரட்டப்பட்டுவருவதாக பிரதேச செயலர் தி.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஜெப ஆலயம்,நாற்சதுர சுவிஷேச தேவாலயம், சீயோன் ஜெப வீடு, அப்போஸ்தலிக்க திருச்சபை,கல்வாரி, இரட்சிப்பின் சத்தம், எக்காளத் தொனி, பெந்தனேஸ் திருச்சபை, மெனியஸ் ஆசீர்வாத திருச்சபை போன்றவற்றின் விபரங்களும் இத் திருச்சபை மதகுருமார்களின் விபரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன.

எனவே கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்கள் விபரங்களை கலாசார உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோரிடம் சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (9-267)





உருத்திரபுரம் மாணிக்க பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் இடம் பெற்றபோது... (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)




# பெயரளவில் மாத்திரமே கி.அபிவிருத்திச் சங்கங்கள்

## கண்டாவளை மக்கள் விசனம்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகள் திருப்திகரமாக அமையவில்லையென மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த பிரதேச செயலர் பிரிவின் கீழ் சுமார் 30 இற்கும் மேற்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இச் சங்கங்களின் நிர்வாகத் தெரிவு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறவேண்டும்.

எனினும் இப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள பெரும்பாலான சங்கங்களின் நிர்வாகத் தெரிவுகள் அவ் விதம் இடம்பெறவில்லை.

பழைய நிர்வாகத்தின் செயற்பாடுகள் மிகக்குறைவாகவுள்ளதோடு, நிர்வாகக் கட்டமைப்பிலும் ஒழுங்கீனங்கள் ஏற்பட்டுள்ளன.

இப்பழைய நிர்வாகங்கள் கூட்டங்களை நடத்தும்போது சங்கத்தின் உறுப்பினர்களையும் பொதுமக்களையும் அழைப்பதில்லை.

சங்கத்தின் முக்கியமானவர்கள் மாத்திரமே கூட்டங்களில் பங்குகொள்கின்றனர்.

கிராமங்களின் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட இச் சங்கத்தின் நடவடிக்கைகளால் கிராம மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நடவடிக்கைகளை அவதானித்து மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறு கிராமத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-263)

# மனிதவுரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தை அமைக்குக

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் மனிதவுரிமை ஆணைக்குழுவை நிறுவவேண்டுமென சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

இம் மாவட்டத்தில் இது வரை இவ் ஆணைக்குழு அமைக்கப்படவில்லை.

இதனால் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக மக்கள் 78 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள வவுனியா அலுவலகத்திற்கும் 114 கிலோமீற்றர் தொலைவிலுள்ள யாழ்ப்பாண அலுவலகத்திற்குமே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அதிக தூரம் பணத்தை செலவழித்து சென்றாலும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைப்பதில்லையெனவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் அலுவலகம் உள்ள போதிலும் அதன் செயற்பாடு முழுநேரம் இடம்பெறுவதில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அடிப்படை மனிதவுரிமை மீறல்கள், கைதுகள், இராணுவத்தின் அச்சுறுத்தல், சிறுவர்,பெண்களுக்கெதிரான வன்முறைகள் போன்ற ஏனைய சமூகப் பிரச்சினைகள் இடம்பெற்று வருகின்றன.

மனிதவுரிமை ஆணைக்குழுவின் தலையீடு முக்கியமானதாகக் காணப்படுகிறது.

எனவே மாவட்டத்தில் அலுவலகத்தை நிறுவுவதன் அவசியத்தினை வலியுறுத்தி முள்ளிவாய்க்காலுக்கு வருகை தந்த ஐ.நாவின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதேபோல் கள்ளப்பாடு ஐஸ் தொழிற்சாலைத்திறப்புக்கு வருகை தந்த ஐ.நாவின் உதவிச் செயலாளரிடமும் வலியுறுத்தப்பட்டது.

இதுவரை அவ் அலுவலகம் அமைக்கப்படவில்லை. ஆகவே தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு மனிதவுரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தை உடனடியாக முல்லை. மாவட்டத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். (9-267)

# மின் விநியோகம் பூர்த்தியடையவுள்ளது

(கண்டாவளை)

புளியம் பொக்கணை கிராம சேவையாளர் பிரிவின் கீழுள்ள மூன்று கிராமங்களுக்கான மின்சார விநியோகத்திட்டம் பூர்த்தியடையவுள்ளது.

இதன்படி புளியம்பொக்கணை கிராம சேவையாளர் பிரிவின் கீழுள்ள கல்வெட்டித்திடல், முசிரன்பிட்டி ஆகிய கிராமங்களுக்கான மின் விநியோகம் வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக கடந்த வருடம் வழங்கப்பட்டது.

தற்போது முசிரன்பிட்டி கிராமத்திற்கான மின்சாரம் வழங்குவதற்கான வேலைத் திட்டங்கள் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கிராமத்திற்கான மின்சார விநியோக வேலைகள் நிறைவடையும் பட்சத்தில், குறித்த கிராம சேவையாளர் பிரிவின் கிராமங்களுக்கான மின் விநியோகம் பூரணமாகவுள்ளது. (9-263)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காரியங்களை எளிதாக செய்து முடிக்கும் 6 ஆம் எண்காரர்களின் குணாதிசயங்கள்

06

பொதுவாக 6,15,24 போன்ற திகதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருபவர்கள்.

இந்த எண்காரர்கள் ஆடம்பரத்தை விரும்பாதவர்களாகவும் அமைதியானவர்களாகவும் இருப்பார்கள்.

அமைதியாக இருக்கிறார்களே என்று இவர்களை நம்பி விடக்கூடாது. ஆபத்தானவர்களாகவும் இருப்பார்கள்.

நீருக்கு அடியில் நெருப்பைக் கொண்டு போகின்றவர்கள் என்று சொல்கின்றவர்கள் அல்லவா? அது இவர்கள்தான். இவர்களுடன் பழகும்போது மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்.

இந்த எண்காரர்களிடம் விசேடமான ஓர் அம்சம் இருக்கும். அது என்ன தெரியுமா?

ஏனையவர்களால் செய்து முடிக்க முடியாத ஒரு காரியத்தை இவர்கள் மிகவும் எளிதாக செய்து முடித்து விடுவார்கள்.

அப்படி ஒரு கவர்ச்சியும் திறமையும் இந்த எண்காரர்களிடம் இருக்கும்.

கொஞ்சம் பிடிவாதக்காரர்களாக இருக்கும் இவர்கள் எளிதில் எதையும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அதே நேரம், இவர்களை புகழ்ந்து பேசி இவர்கள் மீது அன்பு செலுத்துகிறவர்களுக்காக இவர்கள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள்.

இவர்களுக்கு நிரந்தர பகைவர்கள் என்று எவரும் இருக்க மாட்டார்கள்.

இவர்கள் இல்லாத இடத்தில் இவர்களைப் பற்றி கன்னாபின்னாவென்று திட்டித் தீர்த்தாலும் இவர்களைக் கண்டதும் வசியமாகி விடுவார்கள். அப்படி ஒரு ஆதர்சன சக்தி இந்த எண்காரர்களிடம் உண்டு.

இவர்கள் தங்களுக்கு பழக்கமில்லாத ஒரு துறையில் அல்லது தொழிலில் ஈடுபட்டாலும் விரைவில் அந்தத் துறையில் தேர்ச்சி பெற்று விடுவார்கள்.

அதிகாலையிலேயே எழுந்து விடும் இவர்கள், மிகவும் சுறுசுறுப்பாக செயற்படுவார்கள்.

வீண் பொழுது போக்கு என்பதெல்லாம் இவர்களுக்குப் பிடிக்காது. இவர்களில் சிலர் ஆன்மீகத்துறையில் அதிகம் ஈடுபாடு கொண்டிருப்பார்கள்.

பல சமய நூல்கள் எப்போதுமே இவர்களுடைய மனதைக் கவர்ந்து கொண்டிருப்பதால் இறுதிக் காலத்தில் இவர்கள் சிறந்த தத்துவஞானிகளாகப் பரிணமிக்க வாய்ப்பிருக்கிறது.

## ஜோதிடக் களம்

தங்கள் மன அமைதியைக் கெடுத்துக் கொள்ளும் காரியங்களில் இவர்கள் ஈடுபடுவது குறைவாகவே இருக்கும். இதனால் வைத்தியரிடம் போவதும் குறைவாகத்தான் இருக்கும்.

இந்த எண்காரர்களுக்கு நண்பர்களின் ஆதரவிலோ அல்லது அரசாங்க ஆதரவிலோ வெளிநாடுகளைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும்.

அதேபோல் ஆதாயம் இல்லாமல் எந்தவொரு காரியத்திலும் இவர்கள் இறங்க மாட்டார்கள்.

நவநாகரிகமான பெண்களை– ஆண்களை எல்லாம் இவர்கள் விரும்பமாட்டார்கள்.

அதேநேரம் அவர்களுடைய நடை உடை பாவனை எல்லாம் இவர்களுக்கு எரிச்சல் தரும் அம்சமாகவே இருக்கும். கிராமியப் பெண்கள்– ஆண்களைத்தான் இவர்கள் விரும்புவார்கள்.

இந்த எண்காரர்களின் சொந்தக் குடும்பத்தில் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருக்காது.

சிலருக்கு அபூர்வமாக மூன்று குழந்தைகள் இருக்கும்.

இந்த எண்கார ஆண்கள் வீட்டில் ராமர்களாகவும் வெளியில் கிருஷ்ணர்களாகவும் இருப்பதுதான் இதற்கும் காரணம்.

இந்த எண்கார பெண்கள் அந்த விடயத்தில் கொஞ்சம் உணர்ச்சியற்றவர்களாகவே இருப்பார்கள்.

உப்பிட்டவரை உள்ளவும் நினை என்று ஒரு பழமொழி இருக்கிறதல்லவா? அது இவர்களுக்கு நிச்சயமாகப் பொருந்தும்.

இதற்குத் தலையாய ஒரு காரணமும் இருக்கிறது. அதாவது தங்களுக்கு உதவி செய்கிறவர்கள் எவராக இருந்தாலும் அவர்களிடம் இவர்கள், விசுவாசமாக நடந்து கொள்வார்கள்.

ஒரு சிறு உதவி செய்தாலும் கூட அவர்களை கடைசிவரையில் நன்றியோடு நினைப்பார்கள். இவர்களிடமுள்ள இந்த நன்றி, விசுவாசம் கடைசிக் காலம் வரை இவர்களைக் காப்பாற்றும்.

அதேநேரம் கிரக நிலை மாற்றமடைந்திருந்தால் அல்லது மற்றைய எண்களின் பாதிப்பு இருந்தால் இந்த நிலை தலைகீழாக மாறிவிடும். செய்த நன்றிகளை எல்லாம் மறந்து அவர்களை தூற்றிக் கொண்டு திரிவார்கள்.

இவர்கள் எந்த இடத்திலும் அதிக நாள் நிரந்தரமாக இருக்க மாட்டார்கள். ஆனால் ஓர் இடத்தை விட்டவுடன் வேறு ஓர் இடம் உடனே இவர்களுக்குக் கிடைத்துவிடும். இந்தப் பாக்கியம் மற்றைய எண்காரர்களுக்குக் கிடைக்காது.



காற்று வேகமாக வீசுவது நல்லதுதான். ஆனால் அந்த சமயத்தில் உங்கள் வீட்டு வாசல் கதவு, ஜன்னல் கதவுகள் படபடவென்று அடித்துக் கொள்கின்றனவா? அப்படி இருந்தால், வீட்டில் பிரச்சினைகள் ஒன்றன் பின் ஒன்றாக வர ஆரம்பிக்கும். சோம்பல்படாமல் உடனே சரி செய்யுங்கள். அல்லது படபடவென்று அடிக்காமல் கயிறு ஏதாவது கட்டுங்கள். தொல்லை எல்லாம் இல்லையென்று ஆகும்.

தொழில் விடயத்திலும் இப்படித்தான். இவர்களிடம் இருக்கும் ஒரு பலவீனம் என்னவென்றால் ஒரே சமயத்தில் பல காரியங்களை ஆரம்பித்து எதிலுமே முழுமையான கவனம் செலுத்த முடியாமல் திண்டாடுவது.

ஏதாவது ஒரு நிறுவனத்திலோ, அலுவலகத்திலோ அமர்ந்து வேலை பார்க்கும்போது தான் இவர்களுடைய திறமை வெளிப்படும்.

இவர்களுடன் வாதம் புரிந்து வெல்வது என்பது கொஞ்சம் கஷ்டம் தான்.

இவர்களிடம் ஓர் அபூர்வ ஆற்றல் இருக்கும். இவர்களின் பகுத்தறிவைக் காட்டிலும் உள்ளுணர்வு தான் மிகவும் ஆற்றல் உடையதாக செயற்படும்.

இதனால், எந்தவொரு விடயத்திலும் அதன் காரிய, காரணங்களை வைத்து ஒரு முடிவிற்கு வராமல், படாரென்று தங்கள் மனதில் பட்ட ஒரு முடிவைச் சொல்வார்கள்.

இதில் அதிசயம் என்னவென்றால், அந்த முடிவும் சரியாகவே இருப்பதுதான். ஆரம்பத்தில் இவர்களைக் கிண்டல் செய்யும் சிலர் கூட அந்த முடிவுதான் சரியானது என்பதை ஒப்புக் கொள்வார்கள்.

இவர்கள் அரசாங்க உத்தியோகங்களில் ஈடுபட்டால் விரைவில் முன்னுக்கு வருவார்கள்.

இந்த எண்காரர்கள் அநேகமாக ஆசிரியர் தொழிலுக்கு தகுதியுடையவர்களாக இருப்பார்கள் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டுள்ள அநேகமானவர்கள் இந்த எண்காரர்களாகத்தான் இருப்பார்கள். ஒரு சிலர் எழுத்தாளர்களாகவும் பத்திரிகையாளர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் ஆசைப்படுகின்ற காரியங்கள் சற்றுத் தாமதமானாலும் கண்டிப்பாக நிறைவேறியே தீரும்.

இதனால் இவர்கள் நல்ல வெற்றியாளர்களாக இருப்பார்கள். ஆனாலும் பெயர், எண் அதிர்ஷ்டமாக இல்லாவிட்டால் இவை எல்லாமே பொய்யாகிவிடும்.

இவர்களின் வாழ்வில் அடிக்கடி புதியமாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

காதல் விவகாரங்களில், ஈடுபடுவதும் குறைவாகவே இருக்கும். முன்னாள் நடிகைகள் ஜெயலலிதா, ராதிகா போன்றவர்கள் இந்த எண்களில் பிறந்தவர்கள்தான்.

இந்த எண்காரர்களில் சிலர் தாங்கள் இருக்கும் இடத்திற்கு எவரையும் நெருங்க விடமாட்டார்கள். தாங்களே அங்கே ராஜாவாக இருக்க வேண்டும் என்றுதான் விரும்புவார்கள்.

இவர்களுக்கு நட்பான எண்களாக 1,2,9,5,4 எண்களும் பகையான எண்களாக 3,7 எண்களும் செயற்படும்.

இந்த எண்காரர்களுக்குப் பெயர் அதிர்ஷ்டமாக அமையவில்லையென்றால் எல்லாமே தலைகீழாக மாறிவிடும் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

# புத்தாண்டு தினத்தில் குடிபோதையில் வாகனம் செலுத்திய 780 பேர் கைது

(கொழும்பு)

புத்தாண்டு தினத்தில் ஐந்து கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கிளிநொச்சி, ஊருபொக்க, ஹிக்கடுவ, ரிதிகம ஆகிய இடங்களில் கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பொல்பித்திகம பொரவெள பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இரண்டு பேருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கொலைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மோதிக் கொண்ட இருவரில் ஒருவரின் கழுத்ந்த அடுத்தவர் நெரித்துக் கொலை செய்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி விசுவமடு பிரதேசத்தில் பெண் ஒருவர் கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஊருபொக்க பொங்கம பிரதேசத்தில் மற்றுமொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டு குறித்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஹிக்கடுவ மானம்பிட்ட பிரதேசத்தில் போத்தல் ஒன்றினால் தாக்கி நபர் ஒருவரை கொலை செய்துள்ளனர்.

ரிதிகம ஹெல்லவா பிரதேசத்தில் கழுத்தை வெட்டி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவங்கள் தொடர்பில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குடிபோதையில் வாகனம் செலுத்திய 780 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் நோக்கில் விசேட சோதனைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். இதன்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 10ஆம் திகதி முதல் இந்த சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பண்டிகைக் காலத்தில் ஏற்படக் கூடிய விபத்துக்களை தடுக்கும் நோக்கில் இவ்வாறு சோதனை நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)

# மீனவர்கள் பேச்சுவார்த்தையை மே மாதம் நடத்த இணக்கம்

## இந்திய ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையை எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி மற்றும் 13 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டு அரசாங்கம் இதற்கான அனுமதியை வழங்கி இருப்பதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தமிழக அரசாங்கத்தின் சார்பில், தமிழக மீன்பிடித் திணைக்களத்தின் செயலாளர் மத்திய அரசாங்கத்துக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் மத்திய அரசாங்கம் இலங்கையில் உள்ள தமது உயர்ஸ்தானிகரகத்தின் ஊடாக, இலங்கை அரசாங்கத்திற்கு அறிவித்து, இந்த பேச்சுவார்த்தையை நடத்துவற்கான ஒழுங்குகளை செய்ய வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி இரண்டு தரப்புக்கும் இடையில் முதற்கட்ட பேச்சுவார்த்தை நடந்திருந்தது.

இதன் பின்னர் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையை இலங்கையில் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், இரண்டு தடவைகள் இந்த பேச்சுவார்த்தைகள் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டன.

இந் நிலையில் மே மாதம் இந்த பேச்சுவார்த்தை நடத்த இணங்கப்பட்டிருக்கிறது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....இதுதான் சர்க்கரைக் கொல்லி இலை. இதனை நாற்பது நாட்கள் காலை, மாலை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் போயே போய்விடும். நான் கேரண்டி என்று உறுதியாகச் சொன்னார்.

இதனைப் பக்குவப்படுத்தி பவுடராக்கி சாப்பிடுவதைவிட பச்சையாகச் சாப்பிடுவதில்தான் பலன் அதிகம் என்ற அவர், தாம் இவைகளைப் பறித்து விற்பனை செய்வதாகவும் தெரிவித்தார்.

## நடுக்காட்டு நாகர்

மறுபடியும் காட்டிற்குள் பிரவேசம். இப்பொழுது நுழைவது கன்னி வனப் பகுதி. வெளிச்சத்திலிருந்து இருட்டுக்குள் வந்ததுபோல் ஒரே நிழல் காட்சிகள் சூரியனைப் பார்க்க முடியவில்லையே தவிர காட்டுக்குள் நல்ல வெளிச்சம். மிகப் பெரிய மரம் ஒன்று எரிந்து கரியாகி கீழே கிடந்தது. ஒவ்வொரு காட்டினுள்ளேயும் இப்படி எரிந்து விழுந்த மரங்களைக் காணும் போது, தான் காட்டுத் தீயின் உக்கிரம் தெரிய வருகிறது. என்னதான் பாதுகாப்பாய் அருவிக்குப் பக்கத்திலேயே இருந்தாலும்கூட இந்த மரங்களையும் காட்டுத்தீ பொசுக்கி விட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியம்தான் ஏற்படுகிறது.

வழிகாட்டிக்கொண்டு வந்த நாகராஜன் அங்கிருந்த மரம் ஒன்றைச் சுட்டிக்காட்டி இதுதான் கண்திருஷ்டி மரம் என்றார். மரத்தில் நிறைய பட்டைகள் உரிக்கப்பட்டிருந்தது. இந்த மரத்தின் பட்டையை வீட்டு வாசலில் கட்டித் தொங்கவிட்டால் கண்திருஷ்டி ஏற்படாது என்று சொல்வார்கள். அதுமட்டுமல்ல, இந்தப் பட்டையை கல்லிலே உரசினால் சந்தனம் போல சாந்து வரும். இந்த சாந்தை வேனில் கட்டியின் மேல் தடவினால் அப்படியே அடங்கிவிடும். மறுபடியும் கொப்பளங்கள் வரவே



பதஞ்சலி குகை

வராதாம்.

இப்போது மேட்டிலிருந்து கீழிறங்கிக் கொண்டிருந்தோம். ஒரு திருப்பத்தில் பெரியதொரு மரம். அது செங்கடுக்காய் மரமாம். அதன்கீழே நிறைய விழுதுகள் பின்னிப் பிணைந்த வண்ணம் காட்சியளித்தன. நாகங்கள் ஒன்றோடொன்று பின்னிய நிலையில், காட்சி தருமே (சாரையும் நல்ல பாம்பும் இணைவிழைச்சு செய்யும்போது முறுக்கிக் கொண்டிருக்குமே அப்படியொரு பிணைப்பு) பெண்களின் சடை போலக் காட்சி தந்து கொண்டிருந்தது. அம்மரத்தின் அடியில் சிறியதொரு மேடையில், சிறியதொரு நாகலிங்கம் வைக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டிருந்தது. முறுக்கி படம் எடுத்த பாம்பின் நடுவே சிவலிங்கம்.

இதைத்தான் நடுக்காட்டு நாகர் என்று அழைக்கின்றனர். மிகவும் சக்தி வாய்ந்தவராம். ஆளாளுக்கு சூடம் கொளுத்தி நேர்த்திக் கடனைச் செலுத்திக் கொண்டிருந்தனர்.

அதிசயத்திலும் அதிசயமாக இங்கும் தீபலட்சுமி இலை செடிகள் அதிகமாகக் காணப்பட்டன. ஆனால் அவைகளை அருகில் சென்று பார்ப்பதற்கு நேரமில்லை. வழிகாட்டி நடந்து

## ஆன்மீகம் 93

கொண்டே இருந்தார்.

இவ்வளவு ஓட்டமும் நடையுமாகச் சென்றால் எப்படி? கடமைக்கு டூரிஸ்ட் எடுப்பவர் ம் ஆச்சா! ஆச்சா! என்று விரட்டிக் கொண்டிருப்பதைப் போல என்று முணங்க ஆரம்பித்தார் உமா.

நன்றாக ஆற அமர இருந்து பார்த்து விட்டுக் கிளம்பினால், பொழுது சாய ஆரம்பித்துவிடும். பொழுது சாயத் தொடங்கினால் மிருகங்களின் நடமாட்டம் அதிகமாகிவிடும். தவிர நம்மாலும் சரியாக வழியைக் கண்டுபிடித்து கீழே போக முடியாது. காட்டிலேயே எங்காவது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இரவு தங்க வேண்டியதுதான் என்று பதிலளித்தார் நாகராஜ்.

அதுவும் வாஸ்தவம்தான் என்று அவரைச் சற்று வேகமாகவே பின் தொடர்ந்தோம்.

## வெள்ளைப் பிள்ளையார்

இப்போது இருப்பது குபேரகிரி. சரளைத் தரைக்கு நேர்மேற்கே கூப்பிடு தூரம் போனால் ஒரு மலை ஓடை இருக்கிறது. அந்த ஓடையைக் கடந்து சென்றால், கொஞ்சம் தொலைவில் உள்ள ஒரு ஆற்றோரத்தில் யானைக் குட்டியைப் போன்ற தோற்றத்துடன் வெள்ளைப் பிள்ளையார் இருக்கிறார்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

12

அவரை நான் எவ்வளவு நேசிக்கிறேன் என்று அவருக்கே தெரியாது.

ஆனாலும் அவரை நான் நேசிக்கிறேன்.

என்னோடு அவர் அடிக்கடி சண்டை பிடிக்கிறார்.

அதனால் அவரோடு நானும் அடிக்கடி சண்டை பிடிக்கிறேன்.

ஆனாலும் அவரை நான் நேசிக்கிறேன்.

நான் அவரை நேசிக்கும் அளவுக்கு அவர் என்னை நேசிக்கவில்லை என்பதை அறிவேன்.

ஆனாலும் அவரை நான் நேசிக்கிறேன்.

அவரை நான் ஒரு பங்கு நேசிக்கிறேன்; அவர் என்னை அரைப் பங்கு நேசிக்கிறார். எனவே எங்களுடையது ஒரு தலைக்காதல் அல்ல; ஒன்றரைத்தலைக் காதல்.

சூரியன் தன்னை நேசிக்கிறதா என்பது தாமரைக்கு முக்கியமில்லை.

சூரியனை நேசிப்பது தாமரையின் தர்மம்.

ஆகையால் அவரை நான் நேசிக்கிறேன்.

பள்ளிப் பருவத்திலிருந்தே நான் ஜேசுதாஸின் காதலன்.

அவர் குரல்...

சோகமான காந்தம்;

காற்றைக் காயப்படுத்தாமல் பரவுகிற அருவநதி.

காது மடலோரம் தென்றலின் கச்சேரி;

மனசை நனைக்கிற மர்ம மழை.

இந்த எந்திர வாழ்க்கையின் ஆறுதல் மந்திரம்.

கலையும் கலைஞர்களும் வற்றி விடாமல் இருப்பதால்தான் இந்த வறண்ட நூற்றாண்டு வாழ்க்கையில் கூட இன்னும் ஈரம் இருக்கிறது.

வாழ்க்கை இன்னும் மிச்சமிருக்கிறது என்பதை அடிக்கடி நினைவூட்



## ஜேசுதாஸ்

டும் அடையாளங்கள் கலைகளும் இலக்கியங்களும் தாம்.

நம் தலைமுறையில் அந்த அடையாளங்களுள் ஒன்றாய் ஜேசுதாஸின் குரலை நான் குறிப்பிடுவேன்.

காற்றினிலே-பெரும்
காற்றினிலே
ஏற்றி [illegible]
இருவிழி[illegible]

எப்போது இந்தப் பாடல் வாயு மண்டலத்தையே வளைத்துப் போட்டதோ அப்போதே ஜேசுதாஸின் குரல் என் காதுக்குள் நுழைந்து இருதயத்தின் எடுக்க முடியாத பிரதேசத்தில் விழுந்துவிட்டது.

இந்தப் பாடலை இந்தக் குரலைத் தவிர வேறெந்தக் குரலிலும் கேட்க முடியாது என்றே எனக்குத் தோன்றியது.

அந்தக் குரலில் ஒட்டியிருந்த துயரத்தின் துரு என் மீது ஒவ்வொரு முறையும் உதிர்ந்தது.

குமிழிகளைக் கோத்துக் கோத்து முத்தாரம் செய்ய ஆசைப்படும் முட்டாளைப் போல் இந்தப் பாடல் வரிகளை நான் என் குரலில் பாடிப் பார்க்க ஆசைப்பட்டேன்.

சரணத்தின் இறுதி வரிகளில் ஜேசுதாஸ் ஏறியிருக்கும் உயரத்துக்கு நானும் ஏற முயன்று ஒவ்வொரு முறையும் வழுக்கி விழுந்து என்னையும் சங்கீதத்தையும் அவமானப்படுத்தினேன்.

அந்தப் பாடல் அன்று எனக்குள்ளேயே எறிந்த கல்லின் அலைகள், என் இதயக் கரைகளில் இந்த நிமிடம் வரை ஓயவேயில்லை.

அன்று தொடங்கிய ரசிப்பு, அன்று தொடங்கிய லயிப்பு, அறுந்து விடாத நயாகரா அருவிபோல் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

“[illegible] ரோஜாவே”
[illegible] முறை நுகர்ந்திருப்பேன்!



“வெள்ளைப்புறா ஒன்று”
என் வீட்டுக்குள் எத்தனை முறை பறந்திருக்கும்!

“மனிதா மனிதா”
பல நாட்கள் எனது பள்ளி எழுச்சியே அதுதானே!

“கனவு காணும் வாழ்க்கை யாவும்”
எனது இரவின் போர்வையல்லவா இது.

ஜேசுதாஸ் பாடல்களைக் காற்றில் மிதக்கவிட்டு கண்களை மூடிக் கொண்டால் போதும்-

மேகத்தைப் பிடித்துக் கொண்டே நட்சத்திர மண்டலத்தில் நடந்து போவது மாதிரி...

காதலியின் முந்தானை, காற்றில் அலைந்து வந்து கன்னங்களை வருடுவது மாதிரி...

அப்போதுதான் குளித்து முடித்த ஒரு குழந்தையின் கரம் கழுத்தைச் சேர்த்துக் கட்டிக் கொள்வது மாதிரி...

சுகமான அனுபவங்கள் தொடர் கதை எழுதும்...

-வைரமுத்து- (தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

778

## அதிசயப்பழம்

சில ஆண்டுகளுக்குமுன், இரண்டு விஞ்ஞானிகள் கேரள மாநிலத்து அகஸ்தியமலைப் பகுதியில் நடந்து சென்று கொண்



டிருந்தனர்.

அபூர்வமான மூலிகைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய அவர்கள் நகரப்பகுதியில் இருந்து காட்டிற்குள் வந்திருந்தனர்.

காணி என்ற பழங்குடியினத்தைச் சேர்ந்த மல்லன்காணி அவர்களுக்கு வழிகாட்டியாக உதவி செய்தான்.

கரடு முரடான காட்டுப் பாதையில் பயணித்த விஞ்ஞானிகள் இருவரும் விரைவிலேயே களைத்துப் போயினர்.

ஆனால் மல்லனுக்குக் களைப்பே ஏற்படவில்லை.

இடையிலேயே, மடியிலிருந்து ஏதோ ஒரு பழத்தை எடுத்துக் கடித்துத் தின்று கொண்டே களைப்பு என்பது துளிகூட இல்லாமல், தங்களுடன் நடந்து வந்த அவனுடைய சக்தியைக் கண்டு விஞ்ஞானிகள் வியப்பு அடைந்தனர்.

'அடிக்கடி அவன் உண்ணும் பழங்களில்தான் ஏதோ அபூர்வ சக்தி உள்ளதா?" என்று இருவரும் எண்ணினர்.

தங்களுடைய சந்தேகத்திற்கு விடை காண எண்ணி, அவனிடமிருந்து சில பழங்களை வாங்கி இருவரும் உண்டனர்.

என்ன ஆச்சரியம்? எங்கு இருந்தோ அவர்களுடைய உடல்



களிலும் சக்தி பிறந்தது.

அதையறிந்த விஞ்ஞானிகள் பரபரப்படைந்தனர்.

அந்தப் பழத்தை அவர்கள் அதற்கு முன் பார்த்ததும் இல்லை. அதைப்பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை.

அத்தகைய அபூர்வ சக்தி வாய்ந்த பழங்கள் நகரங்களில் வாழும் மனிதர்களுக்கும் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்றும், அவற்றிலிருந்து மருந்து தயாரித்தால், அது எத்தனை நோயாளிகளுக்குப் பயன்படும் என்றும் எண்ணினர்.

உடனே, இருவரும் மல்லனை அந்தப் பழங்கள் உண்டாகும் மரத்தினைத் தங்களுக்குக் காட்ட வேண்டினர்.

ஆனால் மல்லன் அவற்றை அறிமுகமற்றவர்களுக்குக் காட்டக் கூடாது என்று கூறினான்.

தங்கள் சாதியில் மூத்தவர்களிடம் அதைப்பற்றி சொல்லி, அவர்கள் அனுமதித்தால் மட்டுமே அவற்றைக் காட்ட முடியும் என்றும் கூறினான்.

பிறகு அவர்களை தங்கள் இனத்து மூத்தவர்களிடம் அழைத்துச் சென்றான்.

காணியினத் தலைவர்கள் தங்கள் இன மக்கள் அனைவரையும் கூட்டி அதுபற்றி விவாதித்தனர்.

கூட்டத்தில் பலர் தாங்கள் பாதுகாத்து வரும் ரகசியங்களை அந்நியர்களுக்குத் தெரிவிக்கக் கூடாது என்றனர்.

அவர்களுடன் விஞ்ஞானிகள் நீண்ட நேரம் விவாதம் செய்தனர்.

(தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

04.2014
16

- 1346 - தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதியை உள்ளடக்கிய சேர்பியப் பேரரசு டுசான் சில்னி என்பவனால் உருவாக்கப்பட்டது.
- 1444 - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் ஐந்து ஆண்டுகள் போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.
- 1582 - ஸ்பானிய ஆக்கிரமிப்பாளன் ஹெர்னாண்டோ டி லேர்மா என்பவன் ஆர்ஜெண்டீனாவின் சால்ட்டா என்ற குடியேற்றத் திட்டத்தை கண்டு பிடித்தான்.
- 1853 - இந்தியாவின் முதலாவது பயணிகள் தொடரூந்து சேவை பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1876 - பல்கேரியாவில் ஒட்டோமான் பேரரசுக்கெதிராக புரட்சி வெடித்தது.
- 1885 - இலங்கையில் அஞ்சல் அலுவலக சேமிப்புத் திட்ட முறை அறிமுகமானது.
- 1912 - ஹரியெட் குயிம்பி என்னும் பெண் ஆங்கிலக் கால்வாயைவிமானத்தில் கடந்த முதல் பெண ஆனார்.
- 1917 - நாடு கடந்த நிலையில் பின்லாந்தில் இருந்த விளாடிமிர் லெனின் சென் பீட்டர்ஸ்பேர்க் திரும்பினார்.
- 1919 - அம்ரித்சர் படுகொலையைக் கண்டித்து மகாத்மா காந்தி ஒருநாள் உண்ணாநோனபு இருந்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: செம்படையினர் ஜேர்மனியப் படைகளுக்கெதிரான தமது கடைசிப் போரை பெர்லினைச் சுற்றி ஆரம்பித்தனர்
- 1947 - சோவியத்- ஐக்கிய அமெரிக்கா இடையேயான உறவுகளை பனிப்போர் என அமெரிக்க பொருளாதார ஆலோசகர் பேர்னார்ட்பரெக் என்பவர் முதன் முதலாக வர்ணித்தார்.
- 1966 - முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் ஆரம்பமானது.
- 1972 - நாசாவின் அப்போலோ 16 விண்ணுக்கு ஏவப்பட்டது.

பிறப்புகள்

- 1844 - அனத்தோலி பிரான்ஸ், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1924)
- **1851 - சேர் பொன்னம்பலம் இராமநாதன், இலங்கையின் தேசியத் தலைவர் (இ. 1930)**
- 1867 - வில்பர் ரைட், முதன்முதலில் எஞ்சின் உந்தும ஊர்தியில் பறந்து சாதனை படைத்தவர் (இ. 1912)
- 1889 - சார்லி சாப்ளின், நடிகர் (இ. 1977)
- 1927 - திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், கத்தோலக்க திருச்சபையின் 265ஆவது திருத் தந்தை
- 1935 - சுபத்திரன், ஈழத்து முற்போக்கு இலக்கியக் கவிஞர் (இ. 1979)
- 1957 - பெரியசாமி சந்திரசேகரன், இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களின் அரசியல் தலைவர், தொழிற்சங்கவாதி

**இறப்புகள்**

- 1908 - அப்புக்குட்டி கிங்ஸ்பரி, யாழ்ப்பாணக் கல்லூரியின் கணிதவியல் பேராசிரியர்.
- 1972 - யசுனாரி கவபட்டா, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய எழுத்தாளர் (பி. 1899)

### சேர் பொன்னம்பலம் இராமநாதன்



சேர்பொன்னம்பலம்இராமநாதன்1851 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி, யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த இராசவால் முதலியார் (கேட் முதலியார்) அருணாசலம் பொன்னம்பலம் என்பவரின் இரண்டாவது புதல்வராக கொழும்பில் பிறந்தார். இவர் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர். சிங்களவரும், தமிழரும் இன வேறுபாடு பாராது அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டனர்.

குமாரசாமி முதலியார், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரது சகோதரர். ஆரம்பக் கல்வியை கொழும்பு இராணிக் கல்விக்கழகத்தில் (கொழும்பு வேத்தியர் கல்லூரி) கற்றார். 13 ஆவது வயதில், பிரெசிடென்சி கல்லூரியில் கல்வி கற்பதற்காக சென்னைக்கு அனுப்பப்பட் டார். சேர் றிச்சட் மோர்கனின் கீழ் சட்டக் கல்வி பயின்று 1873 இலே உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆனார். பின்னர் சொலிசிட்டர் ஜெனரலாகப் பதவி வகித்து 1906 ஆம் ஆண்டு, பணி ஓய்வு பெற்றார்.

1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் சட்டசபைக்கான முதலாவது தேர்தலில் முழு இலங்கையரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே உறுப்பினராக இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

1879 ஆம் ஆண்டு இலங்கையின் சட்டசபைக்கு உறுப்பின்ராக நியமிக்கப்பட்டார்.1897ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணியாரின் 50ஆவது ஆண்டு விழாவிற்கான இலங்கையின் பிரதிநிதியாக செல்ல பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே தெரிவுசெய்யப்பட்டார்.

அந்த விழாவின் போது அவருக்கு பிரித்தானிய அரசினால் இலங்கையின் முழுமையான தேசியவாதி எனும் தங்கப்பதக்கம் வழாங்கி கௌரவிக்கப்பட்டது.


1921 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் பிரபுப் பட்டம் (Sir) வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மிகுந்த சொல்வன்மையும் வாதத் திறமையும் வாய்க்கப்பெற்ற இவர், இலங்கையில் பிரித்தானியரின் பல நடவடிக்கைகளுக்கு எதிராக வாதாடி இலங்கையரின் நலன்களைப் பாதுகாத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஜய" வருட ராசிபலன்கள்

# சிம்மம்





மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்

**இல்லம் தேடி இனிய செய்தி வரும்!**
**சொல்லைச் செயலாக்கிக் காட்டத் துடிப்போடு பணியாற்றும் சிம்ம இராசி நேயர்களே!**

**சிவல்புரி சிங்காரம்**

# இல்லம் தேடி இனிய செய்தி வரும்!

வந்துவிட்டது ஜய வருடம், வாழ்வில் இனி ஜெயம் தான் உங்களுக்கு, விரயாதிபதியும், யோகாதிபதியும் இணைந்து பிறக்கும் புத்தாண்டு இது. உங்கள் கனவுகள் நனவாகப் போகிறது. அற்புத பலனை எல்லாம் காணப்போகிறீர்கள்.

என்ன இருந்தாலும் வருடம் பிறக்கின்ற பொழுது தனாதிபதி புதன் நீச்சம் பெற்றிருக்கிறாரே, குருவும் கூடிய சீக்கிரத்தில் விரய ஸ்தானத்திற்கு வரப்போகிறது.

இதனால் எப்படி இருக்கும் இந்தப் புத்தாண்டு? ஏராளமான விரயத்தைக் கொடுக்குமா? இல்லை இயல்பான வாழ்க்கையில் வளர்ச்சியைக் கொடுக்குமா? தாராளமாகச் செலவிட முடியுமா? தக்க விதத்தில் அரசியலில் பொறுப்புகள் வந்து சேருமா? பொதுநல ஈடுபாடு எப்படி இருக்கும் என்று பொன்னான நேரத்தை எல்லாம் சிந்தனை செய்தே செலவழிப்பீர்கள்.

வந்தனை செய்து வணங்கும் தெய்வங்களை முறையாக வணங்கினால் எந்த நாளும் இனிய நாளாக மாறும் என்பதையும் அறிந்து வைத்திருப்பவர்கள் தான் நீங்கள்.

**எப்படியிருக்கும் ஜய வருடம்?**

நவக்கிரகங்களில் ராஜகிரகம் என்று வர்ணிக்கப்படும் சூரியனை ராசிநாதனாக பெற்ற நீங்கள் ராஜாங்க அனுகூலம் பெற்றவர்கள். எதிரிகளை உதிரிகளாக்கும் வல்லமை உங்களுக்கு உண்டு. சுறுசுறுப்பிற்கும், பரபரப்பிற்கும் சொந்தக்காரர்களாக விளங்குவீர்கள்.

கொள்கைப் பிடிப்பை கொஞ்சம்கூட தளர்த்திக் கொள்ளாமல் இருப்பவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்களும் நீங்கள்தான். உங்கள் இராசிக்கு சப்தமாதிபதியாக சனி விளங்குவதாலும் சுகாதிபதியாக செவ்வாய் விளங்குவதாலும் சனி, செவ்வாயின் சஞ்சாரத்தை பொறுத்தே உங்களுக்கு வாழக்கைத் துணை அமையும்.

இப்படிப்பட்ட அமைப்புகளைப் பெற்ற உங்களுக்கு இந்தப் புத்தாண்டு சனி மற்றும் செவ்வாயின் வக்ர இயக்கத்தோடு பிறக்கிறது. செவ்வாய் உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமாகும். குரு லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து ஆண்டு தொடங்குவதால் பொருளாதார நிலை மேலும் உயரும்.

பொதுவாக ஆண்டின் தொடக்கத்தில் லாப ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கின்றார். 5 ஆம் இடத்திற்கு அதிபதியான குரு 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தன்னுடைய வருமானம் நீங்கலாக தன்னைச் சார்ந்தவர்களாலும் வருமானம் வந்து சேர வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது -குழந்தைகளாலும் உங்களுக்கு வருமானம் வரும் நேரமிது.

வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்த பிள்ளைக்கு நல்ல வேலை கிடைத்து, கை நிறையச் சம்பளம் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். நூதனப் பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

குருவின் பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதிவதால் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர். அண்ணன், தம்பிக்குள் இருந்த தகராறுகள் அகலும். வழக்குகளில் வெற்றி கிட்டும்.

குழந்தைகளை விடுதியில் விடலாமா? இல்லை கூடவே வைத்துக் கொள்ளலாமா? தேடிய பொருளை செலவழித்து விடாமல் குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி ஒன்று சேமிப்பு நிதியாகவோ அல்லது நகையாகவோ மாற்றி வைக்கலாமா? என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள்.

6,7 க்கு அதிபதியான சனி வக்ரம் பெறுகிறார். 6 க்கு அதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். என்றாலும் சனி வக்ரம் பெறுவதால் குடும்பப் பிரச்சினைகள் ஒன்றிரண்டு வரத்தான் செய்யும். வாழ்க்கைத் துணையோடு அனுசரித்துச் செல்வதும், விட்டுக் கொடுத்துச் செல்வதும் வசந்த காலத்தை உருவாக்கும்.

வக்ரச் செவ்வாயின் ஆதிக்கத்தால் இடம், பூமி விற்பனை செய்த வகையில் இன்னல்கள் உருவாகலாம். கடன் சுமைக்காக ஒரு சில இடங்களை விற்கும் வாய்ப்பு உருவாகலாம்.

**நலம் தரும் ராகு- கேது பெயர்ச்சி!**

ஆனி மாதம் 7 ஆம் திகதி (21.06.2014) அன்று கன்னி இராசியில் ராகுவும் மீன இராசியில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். வருடக்கடைசி வரை அங்கேயே இருக்கிறார்கள். உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் ராகுவும், 8 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். ஆனால், மன நிம்மதி குறைவாகவே இருக்கும்.

குடும்பத்தினர்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்வதே நல்லது. விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். நாடு மாற்றச் சிந்தனைகள் ஒருசிலருக்கு வந்து சேரும். அஷ்டமத்து கேது அலைச்சலை உருவாக்கினாலும் ஆதாயத்தைக் கொடுக்கும்.

உலா வரும் கிரகங்கள் உன்னதமான பலனைத் தரவேண்டுமானால் பரிகாரங்களை மேற்கொள்ள வேண்டும். எனவே, யோக பலம் பெற்ற நாளில் உங்களுக்குரிய அனுகூல ஸ்தலத்தில் ராகு- கேதுக்களுக்கு பரிகாரம் மற்றும் சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வதன் மூலம் சந்தோஷங்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம்!**

ஜய வருடம் மார்கழி மாதத் தொடக்க நாள் முதல் 4 ஆம் இடத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். இந்த அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் அல்லல்களையும் கொடுக்கும். அதே நேரத்தில் ஆனந்தத்தையும் வரவழைக்கும். இல்லத்தில் உள்ளவர்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டும். பணிபுரியும் இடத்திலும் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

வாகனங்களில் பழுது செலவுகள் கூடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். எனவே, புதிய வாகனங்கள் வாங்கும் சிந்தனை மேலோங்கும். தாய் வழி உறவினர்களால் தடை வரலாம். விருப்பங்கள் நிறைவேறவும், நல்ல திருப்பங்கள் உருவாகவும் சனி பகவானை முறையாக வழிபடுவது நல்லது.

உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்படும். தன்னம்பிக்கை மட்டும் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. சனியின் வக்ர காலத்தில் சில நன்மைகளை எதிர்பார்க்கலாம். மாசி 30 முதல் வருடக் கடைசிவரை வக்ர இயக்கத்திலேயே சனி சஞ்சரிக்கின்றார். இக்காலத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**வழிபாட்டின் மூலமே நன்மை அடைய வேண்டிய காலம்!**

14.07.2014 முதல் 31.08.2014 வரை துலாம் இராசியில் செவ்வாய் சனி சேர்க்கை உருவாகிறது. இக்காலத்தில் கூடுதல் கவனம் தேவை. சகோதர வர்க்கத்தினரோடு போராட்டங்களும் சஞ்சலங்களும் உருவாகலாம். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும்.

**குருப்பெயர்ச்சி பலன்கள்!**

இதுவரை லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் வைகாசி மாதம் 30 ஆம் திகதி (13.06.2014) அன்று விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும். உச்சம் பெற்ற குரு விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பெரிய அளவில் விரயங்கள் ஏற்படுமோ என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். எல்லா விரயங்களையும் சுப விரயங்களாக மாற்றுகிற ஆற்றல் குருவிற்கு உண்டு. ஆயினும் அந்த குருவை நீங்கள் வியாழன் தோறும் வழிபாடு செய்வது நல்லது.

அஷ்டமாதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் செயற்படும். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பது பழமொழி அல்லவா. அந்த குருவின் பார்வை 4,6,8 ஆகிய இடங்களில் பதிவாகிறது.

**நாலினை குருதான் பார்த்தால்,**
**நல்லதோர் சொத்து சேரும்.**
**ஆறினை குருதான் பார்த்தால்,**
**அந்நியர் உதவி கிட்டும்.**
**எட்டினை குருதான் பார்த்தால்,**
**இருந்திடும் நோய்கள் தீரும்!**

என்பது ஜோதிட நியதி.

எனவே, குருவின் பார்வை பலத்தால் இடம், பூமி வாங்கும் அமைப்பு ஒரு சிலருக்கு உருவாகும். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். கடன்சுமை குறையும். கவலைகள் தீரும். உடன் பணிபுரிபவர்களின் உதவி கிடைக்கும். இழப்புக்களை ஈடு செய்வீர்கள். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். குருவின் வக்ர காலத்தில் மட்டும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.



**சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும்!

ஜய வருடத்தில் இராசிநாதன் உச்சத்தோடும், தனாதிபதி நீச்சத்தோடும் பிறக்கிறது. சனி சுக்ர பரிவர்த்தனையும் குருவின் பரிபூரண பார்வை வெற்றிகள் ஸ்தானத்தில் பதியும் விதமும் இருப்பதால் வெற்றிச் செய்திகள் வீடுவந்து சேரும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு வியப்பர். அதிர்ஸ்ட வாய்ப்புகள் அடுக்கடுக்காக வந்து அலை மோதும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்க முற்படுவீர்கள். கணவன்- மனைவிக்குள் அன்பும், அரவணைப்பும் அதிகரிக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் மதிநுட்பத்தால் மகத்தான காரியங்கள் பல்வும் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. விநாயர் வழிபாடு வெற்றிகளைக் குவிக்கும்.

**சிறப்பு வழிபாடுகள்!**

**பொதுவாக இராசிநாதன் சூரியன் என்பதால் ஞாயிறு தோறும் சிவாலயம் சென்று சிவனையும் உமையவளையும் வழிபடுவது நல்லது. யோக பலம் பெற்ற நாளில் அருள் வழங்கும் ஆட்கொண்ட நாதர், சிவபுரந்தேவியை பூக்கொண்டும், பாக்கொண்டும் வழிபட்டால் வாழ்க்கை வளமாகும். வசந்தம் உருவாகும்.**

**நாளை துலாம்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ப்பரேட் முதலாளிகள் நடத்தும் சூதாட்டம்!

...இதற்கு அடுத்து, கண்ணுக்குத் தெரியும் ஆற்றுத் தண்ணீர், இரும்பு, நிலக்கரி, இயற்கை எரிவாயு, மீத்தேன் தொடங்கி கண்ணுக்குத் தெரியாத அலைக்கற்றைகள் ஈறாக இயற்கை வளங்கள் அனைத்தையும் எந்த வரைமுறையும் இன்றி இந்தியத் தரகு முதலாளிகளுக்கும் தேசங் கடந்த தொழிற்கழகங்களுக்கும் ஒதுக்கீடு செய்யும் தாராளமயம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், விரைவுச் சாலைகள், மேம்பாலங்கள், விமான நிலையங்கள், மெட்ரோ ரயில் பாதைகள் கட்டும் காண்டிராக்டுகள் மட்டுமின்றி, அவற்றைப் பராமரிப்பது தொடங்கி குப்பை வாருவது வரையுள்ள அனைத்துப் பொதுப் பணிகளையும் தனியாரிடம் அயல்பணியாக ஒப்படைப்பது. அரசும்-தனியாரும் கூட்டுச் சேர்ந்து (Public Private partnership projects) அடிக்கட்டுமான திட்டங்களை உருவாக்குவது. சிறப்புப் பொருளாதார மண்டல வளையங்களை உருவாக்குவது. உள்நாட்டு தொழில்களில் குறிப்பாக பங்குச் சந்தை உள்ளிட்ட நிதிச் சந்தையில் அந்நிய மூலதனம் நுழைவதற்கு இருந்துவந்த கட்டுப்பாடுகளை நீக்குவது. அவற்றுக்கு வரிச் சலுகைகளும் வரித்தள்ளுபடிகளும் அளிப்பது என அடுத்தடுத்து கார்ப்பரேட் முதலாளகளின் நலன்களை முன்னிறுத்தும் திட்டங்களும் கொள்கைகளும் வகுக்கப்பட்டன.

இந்தத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிலங்களை அரசே விவசாயிகளிடமிருந்து பறிமுதல் செயது கொடுத்தது. கனிம வளங்களை வெட்டியெடுப்பதற்கு வசதியாக பழங்குடியின மக்கள் அவர்களின் வாழ்விடங்களிலிருந்து ஆயுத முனையில் வெளியேற்றப்பட்டனர். கார்ப்பரேட் முதலாளிகள் பொதுத்துறை வங்கிளிடம் கடன் பெற்று, இந்தத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு வசதியாக பொதுத் துறை வங்கிகளின் கடன் விதிகள் தளர்த்தப்பட்டன. வட்டி வீதம் குறைக்கப்பட்டது. முதலீடுகளைக் கவர்வது என்ற பெயரில் ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நான்கு இலட்சம் கோடி ரூபாய் பெறுமான வரித் தள்ளுபடிகள் அறிவிக்கப்பட்டன. இப்படியான சலுகைகளை அளிப்பதன் மூலம்தான் நாட்டில் தொழில் பெருகும். வேலை வாய்ப்புகள் கிடைக்கும், ஏற்றுமதி அதிகரிக்கும. அந்நியச் செலாவணி கிடைகதும் என அரசு வாக்குறுதிகளை அள்ளிவிட்டது. இந்த வாக்குறுதிகள் அனைத்தும் பல்லிளித்துப் போய்விட்டதை இப்பொழுது அரசே ஒப்புக் கொண்டுவிட்டது.

நாடு போண்டியாகி நிற்கும் அதேசமயம் அரசின் செல்லப்பிள்ளைகளான முகேஷ் அம்பானி, அனில் அம்பானி, அசிம் பிரேம்ஜி,



அடானி, மித்தல் உள்ளிட்ட ஒரு சில இந்தியத் தரகு முதலாளிகளோ உலகின் சூப்பர் பணக்காரர்களின் வரிசையில் இடம் பிடித்திருக்கின்றனர். விலங்குகளின் இரத்தத்தைக் குடிக்கும் ஒட்டுண்ணிபோல, மனிதர்களின் இரத்தத்தைக் குடிக்கும் முட்டைப் பூச்சி போல, இந்தியத் தரகு முதலாளிகளும் ஏகாதிபத்திய நிறுவனங்களும் நாட்டின் பொதுச் சொத்துக்களை, இயற்கை வளங்களை, பொதுமக்களின் சேமிபபுகளை, உறிஞ்சிக் குடிக்கும் ஒட்டுண்ணிகளாக அரசின் ஆதரவு அரவணைப்போடு உருவாகியுள்ளனர்.

நாடாளுமன்றம் இந்த ஒட்டுண்ணித்தனம் நிறைந்த கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கு ஏற்பாடு செய்து கொடுக்கும் வேலையைத் தான் பார்த்து வருகிறது. இதைச் செய்து கொடுக்கும் நம்பகமான விசுவாசிகள்தான் அமைச்சர்களாக, அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றனர். தி.மு.கவைச் சேர்ந்த ராஜாவைத் தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக நியமிப்பதற்கு மட்டும்தானா லாபியிங் நடந்திருக்கிறது? பெற்றோலியத் துறை அமைச்சராக இருந்த ஜெய்பால்ரெட்டி தூக்கி கடாசப்பட்டு, அவரிடத்தில் வீரப்ப மொய்லி உட்கார வைக்கப்பட்டதன் பின்னே முகேஷ் அம்பானியின் கரங்கள் இருந்தன. வீரப்ப மொய்லி இயற்கை எரிவாயுவின் விலையை இரண்டு மடங்காக உயர்த்திக் கொள்வதற்கு ஒப்புதல் அளித்து, அம்பானியின் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார்.

நிதி மந்திரி ப.சிதம்பரம், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கமல்நாத், வர்த்தகத் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா, திட்ட கமிசனின் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா, ரிசர்வ் வங்கியின் கவர்னர் ரகுராம் ராஜன் எனத் திரும்பும் பக்கமெல்லாம் ஏகாதிபத்திய விசுவாசிகளால் இந்திய அரசாங்கம் நிரம்பி வழிவதை யாரும் கண்கூடாகப் பார்க்கலாம். மாண்டேக்சிங் அலுவாலியா உலக வங்கியிலும், ரகுராம் ராஜன் சர்வதேச நாணய நிதியத்திலும் உயர் அதிகாரிகளாகப் பணியாற்றிவிட்டு இறக்குமதியானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவு ஏன், உலக வங்கியில் குப்பை கொட்டியவர், ஏகாதிபத்திய நிதி மூலதனக் கும்பலின் நம்பகமான ஏஜெண்ட் என்பதால்தான் மன்மோகன் சிங், நரசிம்ம ராவ் ஆட்சியில் நிதி மந்திரியாகவும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் பிரதம மந்திரியாகவும் முடி சூட்டப்பட்டார்.

இதுவொருபுறமிருக்க இந்தியத் தரகு முதலாளிகளும், அவர்களது நிறுவனங்களைச் சேர்ந்த விசுவாசமான அதிகாரிகளும் கொல்லைபபுற வழியாக மேலவை உறுபபினராக நாடாளுமன்ற வளாகத்தில் நுழைவது இன்று ஒரு போக்காக வளர்ந்து வருகிறது. மேலும், அரசு அமைக்கும் நாடாளுமன்ற நிலைக் குழுக்களில் தரகு முதலாளிகளுக்கு இடம் அளிக்கப்படுகிறது. இவை அனைத்திற்கும் மேலாக அரசின் பொருளாதாரக் கொள்கைகள், திட்டங்களைத் தரகு முதலாளிகளும், அதிகார வர்க்க கமிட்டிகளும், ஏகபோக நிதி நிறுவனங்களைச் சேர்ந்த நிபுணர்களும் தான் வகுத்துக் கொடுக்கிறார்கள்.

இதனடிப்படையில்தான் இன்று சமையல் எரிவாயு உருளை, பெற்ரோல், டீசல் ஆகியவற்றின் விலைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் எண்ணெய் நிறுவன அதிகார வர்க்கத்திடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபோல தொலைபேசிக் கட்டணம், மின் கட்டணம் ஆகியவற்றை ஒழுங்குமுறை ஆணையங்கள் என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள அதிகார வர்க்க கமிட்டிகள் தீர்மானிக்கின்றன. இவற்றுக்கு அப்பால், வறுமைக் கோட்டை நிர்ணயம் செய்யவும், சர்க்கரை உற்பத்தி மற்றும் விநியோகத்தில் தாராளமயத்தைப் புகுத்தவும் முன்னாள் ரிசர்வ் வங்கியின் கவர்னர் ரங்கராஜன் தலைமையில் கமிட்டி. சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய்க்கு வழங்கப்படும் மானியங்கள் தொடர்பாக அரசுக்கு அறிவுரை வழங்க இன்ஃபோசிஸ் இயக்குநர் நந்தன் நிலகேனி கமிட்டி. தரகு முதலாளித்துவ நிறுவனங்களை நிர்வகிப்பது தொடர்பாக ஆலோசனை வழங்க தரகு முதலாளி குமாரமங்கலம் பிர்லா கமிட்டி. வங்கித் துறையில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர நரசிம்மன் கமிட்டி என்றவாறு அனைத்து நிலைகளிலும் தனியார்மயத்தைப் புகுத்துவதற்கு ஏற்றவாறு அதிகார வர்க்க கமிட்டிகளை ஒன்றன்பின் ஒன்றாக மைய அரசு அமைத்து வருகிறது. இந்த கமிட்டிகள் தான் உண்மையான அரசாங்கமாகவும், அவை தரும் பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளிக்கும் தலையாட்டி பொம்மையாக நாடாளுமன்றமும் இன்று செயற்பட்டு வருகின்றன.

அரசியல்வாதிகளிடம் காணப்படும் சுயநலம், ஊழல் ஆகிய ஒழுங்கீனங்களைக் காட்டி, தகுதியான, நேர்மையான, நிர்வாக நுணுக்கங்கள் நிறைந்த அதிகார வர்க்கத்தின், துறை சார்ந்த நிபுணர்களின் கைகளில் கொள்கை முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை அளித்தால்தான் நாட்டை முன்னேற்ற முடியும் என இந்த மாற்றத்தைப் புதிய தாராளவாதக் கொள்கை நியாயப்படுத்துகிறது.

அரசு மற்றும் நாடாளுமன்றத்தின் சமூக பொறுப்புகள், கடப்பாடுகள் அனைத்தும் களையப்பட்டு, அவை மேலும் மேலும் ஆழமாக இந்தியத் தரகு முதலாளிகள் மற்றும் அவர்களின் ஏகாதிபத்திய எஜமானர்களுக்குச் சேவை செய்யும்படி மாற்றப்பட்டிருப்பதைத் தான் இவை எடுத்துக் காட்டுகின்றன. அரசியல் கிரிமினல்மயமாகியிருப்பதைவிட கொடிய அபாயம் நிறைந்தது இந்த மாற்றம். எனினும், முதலாளித்துவ ஊடகங்களும் அறிவுத்துறையினரும் ஊழல் இல்லாத நல்லாட்சி, சிறந்த அரசாளுமை ஆகிய மயக்கு வார்த்தைகளைக் கொண்டு இந்த பேரபாயத்தை நியாயப்படுத்தி வருகின்றனர்.

கடந்த இருபது ஆண்டுகளில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி, பா.ஜ.க. கூட்டணி ஆட்சி, ஐக்கிய முன்னணி ஆட்சி எனப் பல வண்ண கூட்டணிகள் மாறிமாறி ஆண்ட போதும், தனியார்மய-தாராளமயக் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் அக்கூட்டணிகளுக்கிடையே எந்த வேறுபாடும் இருந்ததில்லை. சொல்லப்போனால், இக்கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் தங்களுக்கிடையே யார் முந்தி என்ற போட்டிதான் அக்கூட்டணி ஆட்சிகளுக்கிடையே நிலவி வந்தது. இப்படி தனியார்மயக் கொள்கைகளுக்கு எந்த விதப் பாதிப்புமின்றி ஆட்சி நடத்துவதைத் தான் ஆளுங்கும்பல் நிலையான ஆட்சி என வரையறுக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் 16-ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரம் சூடு பறக்க நடந்து வருகிறது. தேர்தலுக்குப் பின் எந்தக் கூட்டணி ஆட்சி அமையும் என்பது பற்றி இந்திய மக்களை விட, ஏகாதிபத்திய நிதி மூலதனச் சூதாடிகள்தான் அதிகம் கவலை கொள்கின்றனர். தங்கள் விருப்பத்துக்கு மாறான கூட்டணி ஆட்சி அமைந்தால், அதனைக் கவிழ்த்து விடவும் தயாராக இருக்கிறது அக்கும்பல். "சிறிய மற்றும் பிராந்திய கட்சிகள் கூட்டணி சேர்ந்துகொண்டு, ஒரு பொதுவான பொருளாதாரத் திட்டமின்றி ஆட்சியமைக்க முற்பட்டால், அது நிதி முதலீட்டாளர்களை வெளியேறத் தூண்டுவதாக அமைந்து விடும். அப்படிப்பட்ட நிலை இந்திய ரூபாயின் மதிப்பை மேலும் வீழ்ச்சியடையச் செய்யும். வெளிநாடுகளிலிருந்து பெறும் கடனுக்கான வட்டியை அதிகரிக்கும் இந்தியப் பொருளாதாரம் மீண்டெழுவதைத் தாமதப்படுத்தும்" என வெளிப்படையாகவே எச்சரித்திருக்கிறது, மூடி (Moody) என்ற ஏகாதிபத்திய ரேட்டிங் நிறுவனம்.

எனவே, தேர்தல்களுக்குப் பின் எந்தக் கூட்டணி ஆட்சி அமைத்தாலும் அது ஏகாதிபத்திய நிதி மூலதனச் சூதாடிகளின், இந்தியத் தரகு முதலாளித்துவக் கும்பலின் ஆட்சியாகவே இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கே இடம் இருக்க முடியாது. அதனால் நடைபெறவுள்ள தேர்தல் என்பது இந்தத் தீவட்டிக் கொள்ளையர்களின் ஆட்சிக்கு ஒரு சட்டபூர்வ நியாயத்தைக் கற்பிக்கும் மோசடி தவிர வேறெதுவும் கிடையாது என்பதை உழைகக்கும் மக்கள் உணர வேண்டும். ஓட்டுக்கட்சிகளும் ஊடகங்களும் முதலாளித்துவ அறிவுத்துறையினரும் முன்வைக்கும் "தேர்தலின் மூலம் மாற்றம்" என்ற மோசடிக்கு மாறாக, நக்சல்பாரி புரட்சியாளர்கள் முன்வைக்கும் "தேர்தலைப் புறக்கணிப்போம் மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்" என்ற முழக்கத்தின் கீழ் அணி திரண்டு, தனியார்மயம்-தாராளமயத்தையும் அதனைப் பாதுகாக்கும் இந்த அரசியல் அமைப்பு முறையையும் வேரடி மண்ணோடு வீழ்த்தக் கூடிய புரட்சிகரப் போராட்டங்களைக் கட்டியமைக்க முன்வர வேண்டும்.

(முற்றும்)

-இணைப்பு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாயத்திற்கான நிதியை இடைநிறுத்துவதாக கனடா அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் மனிதவுரிமை மீறல் விவ காரம் காரணமாக பொதுநலவாய அமைப் புக்கான நிதியை தாம் இடை நிறுத்துவதாக கனடா அறிவித்துள்ளது.**

பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பொறுப்பை இலங்கை வகிக்கின்ற காலப்பகுதிக்கே இந்த நிதி இடைநிறுத்தம் அறிவிக்கப்ப ட்டுள்ளது.

பொதுநலவாய அமைப்புக்கு 12 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க கனடா திட்டமிட்டிருந் தது.

ஆனால் தற்போது அந்த நிதி சிறுவர் மற்றும் சமூக விவகார ங்கள் தொடர்பான வேறு நோக்க ங்களுக்காக பயன்படுத்தப்படும் என் கனடா அறிவித்துள்ளது.

கடந்த வருடம் இலங்கையில் நடந்த பொதுநலவாய அமைப்பு மாநாட்டை கனேடிய பிரதமர் ஸ்ரீ பன் ஹாபர் புறக்கணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை யில் இடம்பெற்ற போர்க்குற்ற மீறல் விவகாரங்களுக்கு பொறுப்பேற்றல் இன்னும் நிகழாமல் இருப்பது தொடர்பில் கனடா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பேர்ட் தெரிவித்துள்ளார்.

சிறுவர் திருமணம், சிறுவர் நிர்ப்பந்தத் திருமணம், மனித வுரிமைகளை மேம்படுத்துவத ற்கான சமுதாய வேலைத் திட்டங் கள் என்பவற்றை நோக்கி ஒதுக்க ப்பட்டிருக்கும் குறித்த நிதி பயன்படு த்தப்படும் என்றும் அவர் தெரிவித் தார்.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனிதவுரிமைகள் மீறல் விவகாரம் காரணமாகவே பொது நலவாய அமைப்புக்கான நிதியை தாம் இடைநிறுத்துவதாக கனடா அறிவித்துள்ளது.

மனிதவுரிமை, ஜனநாயகம், சுதந்திரம் போன்ற காரணிகளுக்கு பொதுநலவாய நாடுகள் அமைப்பு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதே கனடாவின் நிலைப்பாடு என கனேடிய பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# வன்முறை மூலம் இனிமேல் நாம் தீர்வை எட்டமுடியாது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வன்முறையின் மூலமாக இனி மேல் இலங்கையிலோ பிற இடங்க ளிலோ எத்தகைய தீர்வையும் நாம் எட்ட முடியாது என்பதே ***இன்றைய உலக யதார்த்தம்*** என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொ ழில் முயற்சி அபிவிருத்தி அமைச் சர் கே.என். டக்ளஸ் தெரிவித்துள் ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக் கான மஹாபொல புலமைப்பரிசில் கள் வழங்கும் நிகழ்வுகள் கடந்த 12 ஆம் திகதி யாழ். மற்றும் கிளிநொ ச்சி மாவட்ட செயலகங்களில் இடம் பெற்றன.

இந்நிகழ்வுகளில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற் றுகையில்,

அமைதிச் சூழல் ஒன்றை உரு வாக்குவதற்காக நாங்கள் நீண்டகா லமாக உழைத்திருக்கிறோம்.

தமிழ் மக்களுடைய அரசியற் பிரச்சினைகளையும் வாழ்வாதாரத் தேவைகளையும் அமைதிச் சூழலில் வைத்தே தீர்க்க முடியும் என்றே நாங்கள் நம்புகிறோம்.

இந்த நம்பிக்கையைத் தான் சர்வதேச சமூகமும் வெளிப்படுத்தி வருகிறது. அமைதிப் பேச்சுகள் என்பதன் அர்த்தம் இந்த வகை யானதே.

அமைதியைப் பாதுகாத்தால் தான் பதற்றமில்லாமல் எங்களின் வாழ்க்கையை நாங்கள் தீர்மானி க்க முடியும். அமைதியான ஒரு சூழலில்தான் கல்வி, பொருளாதா ரம், அபிவிருத்தி நடவடிக்கைகள் எனச் சகலவற்றையும் நாம் திட்ட மிட்டு மேற்கொள்ள மக்களின் இய ல்பு வாழ்க்கை என்பது அமைதிச் சூழலைப் பாதுகாப்பதன் மூலமே உருவாகும்.

வன்முறையின் மூலமாக இனி மேல் இலங்கையிலோ பிற இடங்க ளிலோ எத்தகைய தீர்வையும் நாம் எட்ட முடியாது என்பதே இன்றைய உலக யதார்த்தம். இலங்கையில் கூட வன்முறைப் போராட்டங்கள் நீண்டகாலமாக நடை பெற்றுள்ளன.

இந்த உலக யதார்த்தத்தைப் புரிந்து கொண்டே நாம் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் தீர்க்க தரிசனத்தோடு எமது அரசியற் பாதை யைத் தெளிவாக வகுத்திருந் தோம்.

எமது பாதையில் தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பினரும் பயணித்தி ருந்தால் அல்லது அவர்கள் சில இணக்கப்பாட்டுடன் செயற்பட்டிருந் தால் இன்று தமிழ் மக்களுடைய அரசியற் பிரச்சினையும் அபிவி ருத்திச்செயற்பாடுகளும் கணிசமான அளவில் முன்னேற்றம் கண்டிரு க்கும். ஆனால் இதை அவர்கள் செய்ய மறுக்கிறார்கள்.

எந்தப் பிரச்சினையும் நிரந்தர மாக எப்பொழுதும் இருப்பதில்லை. ஒரு காலம் சிங்களம் மட்டும் சட்டம் இருந்தது. பின்னர் அது இல்லாமற் போய்விட்டது.

இன்னொரு காலம் சிங்களச் சிறி என்ற பிரச்சினை வந்தது. இப் பொழுது உள்ள இளைய தலைமு றையினரைக் கேட்டால் அப்படி யொரு பிரச்சினை இருந்ததா? அது என்ன பிரச்சினை என்றுதான் கேட் பார்கள். ஏனென்றால் ஒரு இரவில் அந்தச் சிறி என்ற அடையாளம் காணாமற் போய்விட்டது.

அதைப்போல ஒரு காலம் தரப் படுத்தலை தமிழர்களாகிய நாம் கடுமையாக எதிர்த்தோம். நான் கூட அன்று தரப்படுத்தலை எதிர்த்து போரா ட்டத்தில் குதித்தவனே. ஆனால் இன்று அதே தரப்படுத்தலை நாம் ஆதரிக்கிறோம். ஏனென்றால் இன்று எமக்குத் தரப்படுத்தல் பெரும் பங்க ளிப்பைச் செய்கிறது. வசதியற்ற இடங்களில் உள்ள பல மாணவர் கள் பல்கலைக்கழகத்தில் படிப்பத ற்கு இந்தத் தரப்படுத்தல் அளப்ப ரிய வாய்ப்பை அளித்துள்ளது.

ஆகவே இந்த மாதிரி உடனடி யாக எமக்குப் பிழையாகத் தெரிகி ன்ற விடயங்கள் காலப்போக்கில் நம்மை அறியாமலே காணாமற் போய்விடும். இதை நாங்கள் விளங் கிக் கொள்ள வேண்டும்.

நாங்கள் கல்வி, வீட்டு வசதி, போக்குவரத்து, தொடர்பாடல், சுகா தாரம் , மருத்துவம், தொழில்து றைகள், மின்சாரம், நீர்வளம் போன்ற அனைத்துத் துறைகளிலும் செயற் பட்டு மக்களின் தேவைகளைப் பூர் த்தி செய்திருக்கிறோம்.

கல்வியிலே நாம் அடைந்து வரு கின்ற முன்னேற்றத்தையும் நாம் உருவாக்கியிருக்கின்ற அபிவிருத்தி யின் வளர்ச்சியையும் நீங்கள் பாது காத்து உங்கள் எதிர்காலத்தை வளப் படுத்திக் கொள்ள வேண்டும் என் றார். (2)

# இன்று ஒரு தகவல்

## படிப்பும் புத்தியும்

ஒரு மாணவனை படிப்பெல்லாம் எப்படி இருக்கிறது என்று விசாரித்தேன். அவன் அலுத்துக்கொண்டான். “நான் நன்றாகத் தான் படிக்கிறேன்.... இருந்தாலும் புத்தியிலே சரியாக ஏறமாட்டேன் என்கிறது'' என்றான். கல்வி கற்கக் கூடிய ஒரு மாணவன் சம்பந்தப்படும் புத்திகள் பலவகை அவற்றைப் பற்றி வாரியார் சுவாமிகள் விளக்கியிருக்கிறார்.

மிருத்து புத்தி என்பது ஒன்று. மிருத்து என்றால் மண்.மண் சுவரிலே ஆணி அடிப்பதும் சுலபம். அதைப் பிடுங்கி எடுப்பதும் சுலபம். அது மாதிரி சிலர் ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதை இலகுவாகக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். சிறிது நேரத்திலே சுலபமாக மறந்தும் விடுவார்கள். இது மிருத்து புத்தி.

தாரு புத்தி என்பது இன்னொன்று. தாரு என்றால் மரம். பச்சை மரத்திலே ஆணி அடிப்பது சுலபம். ஆனால் அதைப் பிடுங்கி எடுப்பது கஷ்டம். அது மாதிரி ஆசிரியரிடம் கேட்டதைக் கவனமாக மனதில் பதியவைத்துக் கொண்டு அதை மறக்காமல் இருப்பது தான் தாருபுத்தி. பட்டமரமாக இருந்தால் அதில் ஆணி அடிப்பது கஷ்டம். ஆணியும் சீக்கிரம் நழுவி விடும். அது மாதிரி கேட்கிற விடயம் மனதிலே பதிவத கஷ்டம். அப்படிப் பதிந்தாலும் அத நீடித்திருப்பதும் கஷ்டம்.

இன்னொரு புத்தி ''சிவாபுத்தி'' சிவா என்றால் கல். ஒரு கருங்கல்லிலே நான்கு துளையைப் போட்டு ஒரு துளையிலே உளியை வைத்து அடித்தால் மற்றைய துளை யாவும் பிளந்து கல் இரண் டாகிவிடும். அது மாதிரி சந்தியான இடங்களிலே குறிப்பான ஒரு பொருளைச் சொன்னால் அதைக் கொண்டு மற்றையவற்றையும் தெரிந்து கொள்வது சிவாபுத்தி.

வேணு புத்தி என்றால் என்ன தெரியுமா? வேணு என்றால் மூங்கில். மூங்கில் கணுவிலே ஒரு பக்கத்தில் உளி வைத்து அடித் தால் இரண்டு பக்கமும் பிளந்துவிடும். அது மாதிரி ஒரு செய்தி யைக் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே அதனுடைய முன்–பின் தொடர்புகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். அது வேணு புத்தி.

தைலபுத்தி என்றும் ஒன்றுண்டு. தைலம் என்பது எண்ணெய். தண்ணீரிலே ஒரு துளி எண்ணெயை விட்டால் அது தண்ணீர் முழுவதும் பரவுவது மாதிரி ஆசிரியர் சுருக்கமாக ஒரு விடயத்தைச் சொன்னால் அதை வைத்துக் கொண்டே முழு விடயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். அது தைலபுத்தி.

கற்பூரபுத்தி பற்றித் தெரியுமா? கற்பூரம் தீப்பட்டவுடன் தீயைப் பிடித்துக் கொள்ளும். ஆசிரியர் சொன்னவுடன் நுண்ணறிவோடு பாடங்களைப் புரிந்து கொள்வது. கரிப்புத்தி என்று ஒன்று! கரியிலே நெருப்பை வைத்து விசிறினால் தான் கரி நெருப்பாகும். அது மாதிரி காலை– மாலை வேளையிலே ஆசிரியர் வந்து பாடம் சொல்லிக் கொடுப்பார். அதைக் கொண்டு புரிந்து கொள்வது இந்த வகை.

கதலித் தண்டுப் புத்தி என்று ஒருவகை உண்டு. கதலி என்பது வாழை மரம். கதலித் தண்டிலே நெருப்புப் பிடிப்பது எவ்வாறு முடியாத காரியமோ அந்த அளவுக்கு முடியாதது அவர்களுக்கு படிப்புச் சொல்லிக் கொடுப்பது.

இவை தவிர இன்னும் சில வகையாகவும் மாணவர்களை இனம் பிரிப்பது உண்டு. ஆசிரியர் சொல்பவற்றில் நல்லதை மட்டும் எடுத்துக் கொள்பவன் அன்னம். ஆசிரியர் கிடைத்த இடத்திலே பாடத்தைக் கேட்டுக்கொண்டு,பின் தனியாக உட்கார்ந்து சிந்தித்துப் புரிந்து கொள்பவன் பசு. பசு மாடும் அப்படித்தானே! புல் கண்ட இடத்திலே மேயும். பின் தனியாக நிதானமாக அசை போட்டு தேவையற்றவற்றை வெளியே விட்டுவிடும். ஆசிரியர் சொன்னதை மாத்திரம் சொல்பவன் கிளி. பல இடங்களிலே பாடம் கேட்டு கடைசியில் ஒன்றும் புரியாமல் போகிறவன் ஆடு. ஆடு ஓரிடத்திலும் வயிறார மேயாது. அங்கும் இங்கும் அலையும். சில பேருக்கு எருமை என்று பெயர். எருமை குளத்து நீரைக் கலக்கித் தான் குடிக்கும். அது மாதிரி ஆசிரியர் மனதை நோகச் செய்யும் மாணவர்கள் இந்த ரகம்.

“அன்னம், ஆவே, மண்ணொரு கிளியே
இல்லக் குடமாம் எருமை நெய்யரி
அன்னவன் தலை, இடை, கடை மாணாக்கர் ”
என்றார் பவணந்தி முனிவர்.

இவ்வளவெல்லாம் இருந்தாலும் இந்தக் காலத்து மாணவர் கள் ஒரு தனி ரகம். ஓர் ஆசிரியர் வகுப்பிலே பாடம் நடத்திக் கொண்டிருந்தார்– இலக்கண வகுப்பு. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றிப் பாடம் நடத்திவிட்டு “ இப்பொழுது நான் ஒரு வாக்கியம் சொல்வேன். அது என்ன காலம் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும் ” என்றார் ஆசிரியர். மாணவர்கள் சரி என ஒப்புக்கொண்டார்கள். “நான் நாளைக்கு பாடம் நடத்தப் போகிறேன் ” இது என்ன காலம் என்று கேட்டார் ஆசிரியர்.

“இது எங்கள் போதாத காலம் சேர் ” என்றான் ஒரு மாணவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை எப்போதுமே கசக்கும்

## குஷ்பு அதிரடி பேட்டி

குஷ்பு தைரியசாலிதான். கடந்த ஆண்டு தன்மீது செருப்பு வீசப்பட்ட அதே திருச்சியில் இருந்து தனது தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கிவிட்டார்.

**"தென் சென்னை தொகுதியில் நீங்கள் தி.மு.க. சார்பில் போட்டியிடப் போவதாகப் பேச்சு அடிபட்டது. ஆனால், உங்களுக்கு வாய்ப்பு தரப்பட வில்லை. அப்படி என்றால் தி.மு.க-வில் இருந்து நீங்கள் ஓரளவு ஓரங்கட்டப் பட்டுவிட் டீர்கள் என்று சொல்லலாமா..?"**

"நான் தேர்தலில் போட்டியிடப் போகிறேன என்று எங்கேயாவது சொனனேனா? எங்கேயும் சொல்லவில்லை. பத்திரிகையாளர்கள் ஆளாளுக்கு முடிவு செய்துவிட்டு, "குஷ்பு தென் சென்னையில் போட்டியிட போகிறார்' , "மத்திய சென்னையில் போட்டியிடுகிறார் என்று எழுதினார்கள். தேர்தலில் போட்டியிட தலைமைக் கழகத்தில் நான் நாமினேஷன் செய்தேனா? இல்லையே! பிறகு எப்படி எனக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும்? கட்சியில் இருந்து ஓரங்கட்டப்பட்டிருந்தால் பிரசாரத் துக்கு வந்திருப்பேனா? அவை அனைத்துமே வதந்திகள். நான் தி.மு.க-வின் கோடானு கோடி தொண்டர்களில் ஒருத்தி!"

**"எதை மையமாகக் கொண்டு இந்தத் தேர்தலில் நீங்கள் பிரசாரம் செய்கிறீர்கள்..?"**

"உண்மையை மட்டும் பேசி பிரசாரம் செய்கிறேன். "கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது, தேர்தல் அறிக்கையை ஜெயலலிதா வெளியிட்டார்கள். இதுவரை அவை அனைத்தும் வெறும் வாக்குறுதியாகவே இருக்கிறதே தவிர, இந்த மூன்று வருட ஆட்சிக் காலத்தில் சொன்ன எதையும் நடைமுறைப் படுத்தவே இல்லை. அதனால் மக்கள் எந்தளவுக்கு கஷ்டப்படுகிறார்கள், பாதிக்கப்படுகிறார்கள் என்று நாம் தினம் தினம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். நான் என்னுடைய பிரசாரத்தில் உண்மையை மட்டும்தான் பேசுகிறேன். உண்மை எப்போதும் கசக்கும்."

**"அப்படி என்றால் ஜெயலலிதா அரசு, இந்த மூன்று வருடங்களில் மக்களுக்கு எதையுமே செய்யவில்லை என்கிறீர்களா?"**

"என்ன செய்தார்கள்? நான் ஆட்சிக்கு வந்தால் ஆறு மாதத்தில் மின்வெட்டு பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று சொன்னார் களே. செய்தார்களா? கடந்த தி.மு.க. ஆட்சியில எல்லா பவர் பிளான்ட்ஸ் தயார் செய்து வைத்திருக் கிறார்கள். அதை நிறைவேற்றியிருந்தாலே மின்சார உற்பத்தியில் முழுமையடைந்த மாநிலமாக தமிழ்நாடு மாறி யிருக்கும். அந்தத் திட்டங்களைக் கைவிட்டு விட்டார். அதனால் இன்றைக்கு தினமும் 10 மணி நேரத்துக்கு மேல் மின்தடை இருக்கிறது. இதனால் படிக்கிற பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயிகளுக்குப் பிரச்சினை, தொழிற்சாலையில் பிரச்சினை. இந்த மூன்று வருடத்தில் இந்த மின் பிரச்சினையால் புடைவைத் தொழில் பாதிக்கப்பட்டு 25 ஆயிரம் குடும்ப ங்கள் வீதிக்கு வந்திருக்கிறார்கள். முதலாளிகள் இப்போது டிரைவர் வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

தலைவர் கலைஞர் ஆட்சியில் 6,000 கோடியாக இருந்த புடைவை ஏற்றுமதி, இந்த மூன்று வருடத்தில் 600 கோடியாக குறைந்திருக்கிறது. பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் தெருவுக்கு வந்திருக்கிறார்கள். கடந்த 3 வருடத்தில் தமிழகத்தில் விவசாய நிலைமை என்ன? வறட்சி காரணமாக காவிரி டெல்டா பகுதியில் மட்டும் 12 விவசாயிகள் தற்கொலை செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் உடல் நலமில்லாமலும் வயது முதிர்வு காரணமாகவும் இறந்ததாக விளக்கம் சொல்லி விடயத்தை மூடி மறைக்கிறார்கள்.

## தேர்தல் களம்

**"தி.மு.க-வின் தேர்தல் பிரசாரத்தில் கருணாநிதி, ஸ்டாலின் உட்பட யாருமே காங்கிரஸை விமர்சனம் செய்யவில்லையே.. அப்படி என்றால் தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸோடு தி.மு.க. கூட்டணி சேர வாய்ப்பு இருக்கிறதா?"**

"தேர்தல் முடியட்டும். தி.மு.க. யாரோடு கூட்டணி வைக்கும் என்பதை தலைவர் முடிவெடுப்பார். ஜெயலலிதா, அவருடைய பிரசாரத்தில் காங்கிரஸை கிழிகிழி என்று கிழிக்கிறார்கள். பி.ஜே.பி. குறித்து ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை. அவரிடம் நீங்கள் கேள்வி எழுப்ப வில்லையே? கலைஞரிடம் மட்டும் கேள்வி கேட்கிறீர்கள். ஏனென்றால் தலைவர் மட்டும்தான் பத்திரிகையாளர்களுக்கு ஜனநாயக ரீதியாக கேள்வி எழுப்பும் உரிமையைக் கொடுத்துள்ளார். அந்தத் தலைமைக்கும் இந்தத் தலைமைக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் இதுதான். கலைஞர் ஜனநாயக மனிதர்.

அந்த அம்மாவுக்கும் ஜனநாயகத்துக்கும் சம்பந்தம் இல்லை."

**"முதல்வர் ஜெயலலிதாவின் ஹெலிகொப்டர் பிரசாரம் பற்றி உங்கள் கருத்து என்ன?"**

"மக்கள் காலையில் 10 மணியில் இருந்து மாலை 4 மணி வரைக்கும் கொளுத்துகிற வெயிலில் உட்கார்ந்து காத்துக்கிடக்கிறார்கள். அந்தம்மா ஹெலிகொப்டரில் வந்து இறங்குகிறார். இறங்கி அங்கிருந்து மேடைக்கு ஏ.சி. வானில் வருகிறார். மேடையிலும் ஏ.சி. அதில் நின்று, கொஞ்சம் நேரம் "செய்வீர்களா செய்வீர்களா என்று கேட்டுவிட்டுப் போய்விடுகிறார்.



**மக்களை எங்கே சந்திக்கிறார்?** மக்களை சந்தித்தால் தானே மக்களுடைய பிரச்சினை தெரியும்? தளபதியும் தலைவரும் அப்படியில்லை. தலைவர் இந்த வயதிலும் ரோட்டில் பயணம் செய்கிறார்.

வானிலும் ரயிலிலும் பயணிக்கி றார். மக்களைச் சந்திக்கிறார். தளபதி காலில் சக்கரம் இருக்கிறதா என்று முதலில் பார்க்க வேண்டும். அவர் தமிழ்நாடு முழுவதும் சுற்றிக கொண்டே இருக்கிறார். அத னால்தான் மக்கள் படும் கஷ்டங்களை உணர முடிகிறது. ஹெலிகொப்டரில் வந்துபோகவும், அதற்காக ஹெலிபேட் அமைக்கவும் ஒரு தடவைக்கு எத்தனை இலட்சம் ரூபாய் செலவு செய்கிறார்கள் என்று பாருங்கள். இதுவரை 40 ஹெலி பேடுகளை அமைத்திருக்கிறார்கள். இந்த ஹெலிபேடுகளால் எந்தப் பயனும் கிடையாது. 5 கோடி செலவு செய்து பொதுக்கூட்டம் நடத்துகிறார். அம்மையார் ஜெயலலிதா ஒரு தடவை பேசுவதற்கு 5கோடி என்றால் ஒரு மாதத்தில் எத்தனை ஊருக்குப் பிரசாரத்துக்குப் போயிருப்பார்கள். எவ்வளவு செலவு என்று நீங்களே கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள்

மக்கள், அ.தி.மு.க. மேல் அதிருப்தியாக இருக்கிறார்கள். பல இடங்களில் அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டுகிறார். மூன்று வருடமாக எதுவுமே செய்யவில்லை என்று அமைச்சர்களை முற்றுகையிடுகிறார்.

இப்போது மக்கள் மனது மாறியிருக்கிறது . 16 ஆம் திகதி மக்களின் மனநிலை முழுமையாக தெரிந்துவிடும். ஒன்று மட்டும் உண்மை மக்களிடம் தி.மு.க-வின் மதிப்பு அதிகரித்துள்ளது."

**"கோவை பிரசாரத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி, இது என் கடைசி தேர்த லாக இருக் கக்கூடும் என பேசி யிருக்கிறாரே?"**

"இதுபோன்ற கேள்வியை என்னைப் போன்ற வெறிபிடித்த தொண்டர்களிடம் கேட்கக் கூடாது. ஏனென்றால் இதை கேட்கும்போது கஷ்டமாக இருக்கும். இந்த மூன்று வருடத்தில் நான், தலைவர் மீது இவ்வளவு பற்றாக இருக்கிறேன் என்றால் வருடக்கணக்கில் தி.மு.க-வில் இருக்கும் தொண்டர்களின் மனநிலை எப்படி இருக்கும்? தி.மு.க. என்பது ஒரு எமோஷனலி அட்டாச் பமிலி."

**ஆனந்தவிகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ம.சுதந்திர முன்னணி முன்னாள் உறுப்பினர் கைது

(கொழும்பு)

துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்று தொடர்பில் வெலிகம பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்னாள் உறுப்பினர் நிமால் விதானகமச்சி கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை - மகாசேன்வத்த கராடுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இரண்டு நபர்களுக்கு இடையில் துப்பாக்கிச்சூட்டு சண்டை இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அதில் இருவர் காயமடைந்து மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர் நேற்றைய தினம் மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். (2)

# சீனப்பிரஜைகள் இருவர் கைது

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் சீனப் பிரஜை இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த போது குறித்த பிரஜைகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுற்றுலா விசாக்களின் மூலம் நாட்டுக்குள் பிரவேசித்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக சீனப் பிரஜைகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போலி நகைகளை குறித்த நபர்கள் விற்பனை செய்து கொண்டிருந்த போது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. (2)

# மீனவர்கள் 26 பேர் சரீரபிணையில் விடுதலை

திருகோணமலை கடற்பரப்பில் சட்டவிரோத வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 26 மீனவர்களையும் திருகோணமலை பதில் நீதவான் திருநாவுக்கரசு திருச்செந்தில்நாதன் சரீரபிணையில் நேற்றுமுன்தினம் மாலை விடுவித்துள்ளார்.

இம் மீனவர்கள் ஒவ்வொருவரையும் 50ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரபிணையில் விடுவித்த நீதவான், அடுத்த மாதம் 11ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

திருகோணமலை துறைமுக பரப்பில் நெய்மலைக்கு அருகில் 3 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, கிண்ணியாவைச் சேர்ந்த இம் மீனவர்கள் 26 பேரையும் கடற்படையினர் கைதுசெய்தனர்.

இதன் பின்னர் இம்மீனவரகளை துறைமுக பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர். இவர்களது படகுகள் கடற்படைத்தளத்தில் வைக்கப்பட்டுள்ளன. (2)

# துஷ்பிரயோகங்களை விசாரணை செய்ய விசேட நீதிமன்றம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

நாட்டில் இடம்பெற்று வரும் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்ய விசேட நீதிமன்றமொன்று அமைக்கப்படவுள்ளது.

சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குற்றச் செயல்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் விசேட நீதிமன்றமொன்று அமைக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான இரண்டு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விரைவில் குருநாகல், கண்டி ஆகிய நகரங்களில் நீதி மன்றங்கள் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகஅவர் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் தொடர்பிலான சந்தேக நபர்கள் மற்றும் குற்றவாளிகள் தொடர்பிலான புள்ளிவிபரத் தகவல்கள் பேணப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (2)


சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## பாராட்டி நல்வாழ்த்து தெரிவிக்கின்றோம்

புதிய முயற்சியாக துவிச்சக்கர வண்டிப் பிரயாணத்தின் மூலம் இலங்கையின் பிரசித்தி பெற்ற சிவத்தலங்களைத் தரிசித்து தனது குறிக்கோளை நிறை வேற்றி அதன் மூலம் இறையாசிகளைப் பெற்றுக் கொண்ட எமது சங்கத்தின் மதிப்பிற்குரிய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரும் துவிச்சக்கர வண்டி ஓட்ட வீரருமாகிய திரு.வைத்திலிங்கம் கைலைநாதன் அவர்களையும் அவருடன் இணைந்து செயற்பட்ட R.R. ரட்ணசிங்கம் குணசேகர அவர்களையும் எமது சங்கம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம். (சி-7004)

பணிப்பாளர்களும் பணியாளர்களும்
சங்கானை பல.நோ.கூ.சங்கம் (வ.து)


# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி சிவகலாபன் மதுரா

உடுப்பிட்டி இலக்கணாவத்தையைப் பிறப்பிடமாகவும்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகலாபன் மதுரா கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு உடுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### அருணாசலம் முத்துத்தம்பி

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் முத்துத்தம்பி கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு 41 Bd de La Chapelle, 75010 Paris, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி தியாகராஜா சிவாம்பிகை

சுன்னாகம் கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா சிவாம்பிகை கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிறிரஞ்சன் வாசுகி

உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா High Wycombe ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிறிரஞ்சன் வாசுகி நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல்10 மணிக்கு 4 Eastern Dene, Hazlemere, Buckinghamshire HP 15 7BT, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### முருகேசு நாகராசா

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நாகராசா கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கரடிப்போக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### ஆறுமுகம் சுந்தரமணியம்

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா வேப்பங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுந்தரமணியம் கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழ்மை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### மகாலிங்கம் பாலச்சந்திரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் பாலச்சந்திரன் கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின்இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு La Maison, Funeraire 7, Boulevard de Menil montant, 75011, Paris, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி சண்முகநாதன் சின்னாச்சி

மீசாலை வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சின்னாச்சி கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### பத்மநாதன் ஞானசண்முகம்

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் ஞானசண்முகம் கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு 600, Princess Highway, Boydchapel, Melbourne, Australia என்னும் முகவரியில் நடைபெறும்.

# இந்திய படையினரை யுத்தத்தில் ஈடுபடுத்தியமை சட்டவிரோதமானது

## இந்திய உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

இந்திய பாராளுமன்றத்திலும், ஜனாதிபதியிடமும் அனுமதி கோராமல், இலங்கை யுத்தத்தில் இந்திய படையினரை ஈடுபடுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் டில்லியைச் சேர்ந்த சட்டத்தரணியான ராம்சங்கர் என்பவர், இந்திய உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் சீக்கியர் ஒருவர் இலங்கையில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற யுத்தத்தை வழி நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரை நேரடியாக கண்ட சாட்சிகளும், ஆதாரங்களும்தம்மிடம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு இந்திய இராணுவம், வான்படை மற்றும் கடற்படை ஆகியோர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியாவில் யுத்தம் பிரகடனம் செய்யப்படாத நிலையில், இந்திய அரசியல் அமைப்பின் படி, இந்திய படையினரை இலங்கையில் ஈடுபடுத்தியமை சட்ட விரோதமானது என்று அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான தீர்ப்பாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. இந்த மனு நாளை வியாழக்கிழமை இந்திய உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வோஷிங்டனில் நடந்த அரசு விழாவில் கலந்து கொண்ட உக்ரைன் நாட்டு நிதி அமைச்சர் மற்றும் அமெரிக்க கருவூல செயலர் இருவரும் அந்நாட்டு நன்மைகள் கருதி ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை படத்தில் காணலாம்

# உக்ரைனுக்கு அமெரிக்கா ஒரு பில்லியன் டொலர் கடன் உதவி

(வோஷிங்டன்)

கடந்த ஆண்டு இறுதியில் உக்ரைன்ஐரோப்பிய யூனியனுடன்இணைவதில் ஏற்பட்ட பிரச்சினையில் அங்கு பதவியில் இருந்த ரஷ்ய சார்பு ஜனாதிபதிவிக்டர்யனுகோவிச பதவி விலகி இடைக்கால அரசு அமைந்தது.

புதிய தேர்தலுக்கான ஏற்பாடுகளில் இந்த அரசு கவனம் செலுத்த உக்ரைனின் ஒரு பகுதியான கிரிமியா ரஷ்யாவுடன் இணைய தீர்மானித்தது.

அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகள் இதனை எதிர்த்தபோதும் ரஷ்யா கிரிமியாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது.

இந்த அரசியல் நெருக்கடிகள் அடங்குவதற்குள்ளாகவே உக்ரைனின் கிழக்கு பகுதிகளில் ரஷ்ய சார்பு கிளர்ச்சியாளர்கள் தங்களின் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

அந்தப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தையும், அரசு கட்டடங்களையும் சமீபத்தில் முற்றுகையிட்டுள்ள அவர்கள் ரஷ்யாவுடன் இணைவதற்கான வாக்கெடுப்பிற்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கொந்தளிப்பான இந்த நிலைமையில் உக்ரைன் அரசுக்கு ஆதரவு அளித்து வரும் அமெரிக்கா நேற்று முன்தினம் அந்நாட்டின் பொருளாதார மீட்பு நடவடிக்கைகளுக்காக ஒரு பில்லியன் டொலர் மதிப்புடைய கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

அமெரிக்காவின் கருவூல செயலர் ஜேகப் லீ உக்ரைனின் நிதி அமைச்சரான ஒலேக் சண்டர் ஸ்லபக்குடன் வோஷிங்டனில் உள்ள கருவூலத் தலைமையகத்தில நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப்பின் இதில் கையெழுத்திட்டார்.

பொருளாதார சீரமைப்பை மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான அத்தியாவசியத் தேவைகளை வழங்குவதற்கும் இந்த கடன் தொகை உடனடியாக அமுலுக்கு வரும்.

மேலும் அத்தியாவசியமான பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் அரசின் முயற்சிகளை இந்த கடன் உதவி வலுவாக்கும என்று அரசுதரப்பு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

சுதந்திரம், ஜன நாயகம் மற்றும் ஐரோப்பிய மதிப்புகள் குறித்த உக்ரைன் மக்களின் விருப்பங்களுக்கான அமெரிக்க அரசின் ஆதரவை இந்த நிபந்தனையற்ற கடன் உதவி குறிப்பதாக உக்ரைன் அமைச்சர் ஒலேக்சண்டர் குறிப்பிட்டார்.

# நைஜீரியாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 71 பேர் பலி



நைஜீரியாவில் தலைநகர் அபுஜா வில் பேருந்து நிலையத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 71 பேர் பலியாகியதுடன் 124 பேர் காயம் அடைந்துள்ளனா.

அபுஜாவின் புறநகர்ப் பகுதியில் உள்ள ஒரு பேருந்து நிலையத்தில் காலை 7 மணியளவில் நூற்றுக் கணக்கான பயணிகள் பேருந்துக்காக காத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு திடீரென்று குண்டு வெடித்ததில், பயணிகள் அலறியடித்துக் கொண்டு நாலாபுறமும் ஓடினார்கள். இந்த குண்டு வெடிப்பில் 71 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

அங்குள்ள நியான்யா மோட்டார் பார்க்கில் சுமார் 4 அடி ஆழத்திற்கு பள்ளம் ஏற்பட்டது. 30க்கும் மேற் பட்ட வாகனங்கள் எரிந்து சேதம் அடைந்தன என்று ஃபிராங்க் பா கூறினார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு இதுவரை எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும், நைஜீரியாவில் அடிக்கடி தாக்குதல் நடத்திவரும் போகோ ஹறாம் தீவிரவாத அமைப்பினர் இந்த குண்டு வெடிப்பை நிகழ்த்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

# குப்பையில் வீசிய லொட்டரி சீட்டுகளுக்கு 7.5 கோடி

(நியூயோர்க்)

அமெரிக்காவில் ஒருவர் குப்பைத் தொட்டியில் வீசியெறிந்த லொட்டரி சீட்டுகளுக்கு 12.5 இலட்சம் டொலர் பரிசு விழுந்துள்ளது.

அந்த லொட்டரி சீட்டுக்களை அவரால் கண்டுபிடிக்க முடியாததால் பரிசுத் தொகையை அவர் இழந்துள்ளார்.

நியூயோர்க்கின் தெற்கு குயின் வீதியில் உள்ள லொட்டரிக் கடை ஒன்றில் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் தினமும் 100 டொலர் வரை லொட்டரி சீட்டுகள் வாங்குவது வழக்கம்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 25 லொட்டரி சீட்டுக்களை அவர் வாங்கியிருந்தார்.

அவற்றுக்கு பரிசு விழுந்தால் இந்த ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம் என்று சம்பந்தப்பட்ட லொட்டரி நிறுவனம் அறிவித்திருந்தது.

ஆனால், பரிசு குலுக்கலுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட எண்களை சரிவர பார்க்காமல் அந்த லொட்டரி சீட்டுக்களை அவர் குப்பையில் வீசி விட்டார்.

இந்த நிலையில், குப்பையில் வீசப்பட்ட 25 லொட்டரி சீட்டுகளுக்கும் பரிசு விழுந்தது தெரிய வந்தது.

இதை அறிந்து திக்குமுக்காடிப் போன அந்த நபர், தான் வீசியெறிந்த குப்பைத் தொட்டியில் அவற்றை தேடிச் சென்றார்.

ஆனால், லொட்டரி சீட்டுகள் கிடைக்காமல் சோகத்துடன் திரும்பினார்.

இது குறித்து லொட்டரி சீட்டுகளை அந்த நபருக்கு விற்பனை செய்த வெண்டி ஹிண்டன் என்ற பெண் கூறுகையில்,

பரிசினை இழந்த நபர் எனது வாடிக்கையாளர். தினமும் 20 முதல் 25 லொட்டரி சீட்டுகளை என்னிடம் வாங்குவார்.

பரிசு எண்களை சரியாகப் பார்க்காத அவரது முட்டாள்தனத்தினால் ஏற்பட்ட விளைவு இது என்றார்.

# விமானத்தை தேடும் பணியில் களமிறங்குகிறது நீர்மூழ்கி ரோபோ

நடுவானில் மாயமான மலேசிய விமானத்தை கடலுக்கு அடியில் நீர் மூழ்கி ரோபோ தேடும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

மலேசிய ஏர் லைன்ஸ் விமானம் காணாமற் போய் நடுவானில் மாயமாகி 37 நாட்கள் ஆகி விட்டன. அந்த விமானம் என்ன ஆனது என்பதை இந்த நவீன அறிவியல், தொழிலநுட்ப உலகிலும் இதுவரை கண்டுபிடிக்க இயலாதது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி உள்ளது.

அந்த விமானம் இந்திய பெருங்கடலின் தென்பகுதியில் விழுந்து நொறுங்கி இருக்கக்கூடும் என்ற ரேடர் தகவலின் பேரில், விமானத்தின் கறுப்பு பெட்டியில் இருந்து வருகிற பிங் சமிக்ஞையை கேட்டு அது இருக்கிற இடத்தை தேடிக் கண்டு பிடிக்கும் 'டோவ்டு பிங்கர் லொக்கேட்டர் என்னும் கருவிகளை ஓஸன் ஷீல்டு என்னும்அவுஸ்திரேலிய போர்க்கப்பலும் 'எச். எம்.எஸ். எக்கோ' என்னும் இங்கிலாந்தின் நீரநிலைப் பரபபு ஆய்வு கப்பலும இழுத்துச் சென்று தேடுகின்றன.

இந்த நிலையில் மாயமான விமானத்தின் கறுப்பு பெட்டியிலிருந்து 4 முறை 'பிங்' சமிக்ஞைகள் வந்தன. இதையடுத்து அந்த இடத்தைச் சுற்றிலும் (அவுஸ்திரேலியாவின் பேர்த் நகருக்கு வடமேற்கில் 2.280 கி.மீ. பகுதியை மையப்பகுதியாக கொண்டு, 57 ஆயிரத்து 923 சதுர கிமீ பரப்பளவு) கறுப்பு பெட்டியை தேடும் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டது.

கறுப்பு பெட்டியில் பொருத்தப்பட்டிருந்த பற்றரியின் ஆயுள் காலம் ஒரு மாதம்தான். இந்த நிலையில் கடந்த 8ஆம் திகதிக்கு பின்னர் 'பிங்' சமிக்ஞை ஒன்றுகூட வரவில்லை. எனவே பற்றரி காலாவதியாகி விட்டது என்று நம்பப்படுகிறது.

இதையடுத்து விமானத்தின் சிதைவுகளை தேடும் வேட்டையில் அதிநவீன நீர்மூழ்கி 'ரோபோ' நேற்று களமிறக்கப்பட்டது. இது 'புளுபின்21' என்று அழைக்கப் படுகிறது. அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான இந்த ரோபோ, அதி நவீன கருவிகளையும், தொழில் நுட்பங்களையும் கொண்டதாகும்.

இந்த ரோபோ, கடலுக்கு அடியில் 4,500 மீற்றர் ஆழத்தில் உள்ள தரைமட்டத்துக்கு சென்று விமானத்தின் சிதைவுகளை தேடி கண்டு பிடிக்கும். ஆனால் இது ஒரு நாளில் நடக்கிற காரியம் அல்ல.

இதுகுறித்து பேர்த் நகரில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் பேசிய அவுஸ்திரேலிய தேடல் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஆங்கஸ் ஹூஸ்டன், "கடந்த 6 நாட்களில் பிங் சிக்னல் ஏதும் வரவில்லை. எனவேஇதுதான் கடலுக்கு அடியில செல்வதற்கு சரியான தருணம என கருதுகிறோம.



இதற்கிடையே எண்ணெய்கசிவும் தென்பட்டுள்ளது. அதில் இருந்து 2 லீற்றர் அளவுக்கு சேகரித்து பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறது.

கடலுக்கு அடியில் நீர் மூழ்கி 'ரோபோ'வை அனுப்பி தேடினாலுமெ, விமானத்தின் சிதைவுகளை கண்டு பிடிக்க முடியாமலும் போகலாம்.

இதுமெதுவாக, கடுமையான உழைப்புக்கு பின்தான் தெரியவரும். நீர் மூழ்கி 'ரோபோ' கடலுக்கு அடியில் செல்வதற்கு 2 மணி நேரம் ஆகும். 16 மணி நேரம் அது அடி மட்டப் பகுதியை துழாவிப் பார்க்கும.

அதைத் தொடர்ந்து 2 மணி நேரத்தில் மீண்டும் மேல் மட்டத்துக்கு வந்து விடும். அதன்பின்னர் அது சேகரித்த தகவல்களை பதிவிறக்கம் செயய மேலும் 4 மணிநேரம் ஆகும்.

முதல்முறை 5 கி.மீ. முதல் 8 கி.மீ பரப்பளவு வரை தேட முடியும் அடிமட்டத்தில் சேற்றுப்படிவுகள் இருக்கலாம.

இது தேடலில் சில சிக்கல்களை ஏற்படுத்தலாம்.இவ்வாறு அவர் கூறினார். கடலுக்கு அடியில் நீர் மூழ்கி 'ரோபோ' விமானத்தை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித தியாகமும் இன்றி
எந்தவித நன்மையையும் பெறமுடியாது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புத்தாண்டில் சரிந்த தேர் சொல்லும் செய்தி என்ன?

யாழ்ப்பாணம் கலட்டிப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழாவின் போது, தேர் சரிந்து வீழ்ந்த செய்தி அனைவரையும் வேதனைப்படுத்தியுள்ளது.

புத்தாண்டின் நன்நாளில் தேர் சரிந்து வீழ்ந்தது என்ற செய்தி எங்களின் வேதனையை இருமடங்காக்கியது எனலாம். தமிழர்களின் பண்பாட்டில் பஞ்சாங்கம் முதல் பல்லி சொற்பலன் பார்ப்பது வரை எதற்கு எடுத்தாலும் சகுனம் பார்ப்பது எங்கள் வாழ்வியலோடு கலந்து விட்டிடவிடயம்.

இந்நிலையில் கலட்டிப் பிள்ளையார் கோவில் தேர் சரிந்து வீழ்ந்த சம்பவம் கவலையைத் தந்த போதிலும்; பக்தர்கள், சிவாச்சாரியார்கள் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படாமைக்காக இறைவன் பொருளுக்கு நன்றி கூறவேண்டும்.

அதேநேரம் இத்தகைய சம்பவம் உலகில் உள்ள அத்தனை ஆலய நிர்வாகங்களுக்கும், பரிபாலன சபைகளுக்கும் ஒரு தெளிவான செய்தியைச் சொல்கின்றது.

அதாவது ஆலய பரிபாலனம் என்பது பதவிகளை அலங்கரிப்பது அல்ல.

ஆலய பரிபாலனம் என்பது மிகவும் பொறுப்பான பணியைக் கொண்டது.

ஆலயத் திருவிழாக்கள், பூசை வழிபாடுகள், விஷேட உற்சவங்கள் என அனைத்திலும் கவனிப்பும் அவதானமும் தேவை.

ஆலய பரிபாலனத்தை தர்மகர்த்தாக்கள் என்றோ அறங்காவலர்கள் என்றோ அழைப்பது உண்டு. அவ்வாறாயின் தர்மத்தை- அறத்தை காப்பாற்றும் பணியே ஆலய பரிபாலன சபையினருடையதாகும்.

எனினும் சமகாலத்தில் ஆலய பரிபாலனம் என்பது தர்மத்தைக் காப்பாற்றுதல் என்பதை மறந்து ஆலயத்தின் பழைய கட்டடத்தை இடித்து புதுக் கட்டடம் கட்டுவது, பகட்டுக்காக திருவிழா செய்து பாட்டுக் கச்சேரி நடத்துவது, தேவைப்படும் போது ஆலயத்தின் ஏற்பட்ட பிணக்கிற்காக நீதிமன்றத்தை நாடுவது என்றவாறான வழிமுறைகளே நடைமுறையாக உள்ளன.

இதற்கு அப்பால், எங்களிடம் இருக்கக்கூடிய இரண்டு பஞ்சாங்கக் கணிப்புக்களின் வேறுபாடுகள் இறைநம்பிக்கையை தகர்த்து விடுகிறது. எதிலும் ஒற்றுமைப்பட முடியாததன் வெளிப்பாடாக ஆலயங்களில் சகுனப்பிழைகள் நடந்து போகின்றன என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

ஊர் கூடி தேர் இழுத்தல் என்ற இந்து சமயத்தின் உயர் பண்பாடு இன்று சகுனப்பிழைகளாக, மனக்கவலைகளாக, இறை நம்பிக்கைகளை வேறுப்படவையாக மாறிவருகின்றன.

இங்குதான் ஆலய பரிபாலன சபை அவை தனிப்பட்டவையாக அல்லது பொதுப்பட்டவையாக இருக்கலாம். எவையாயினும் அவை தங்களின் பணிகளை செம்மையாகச் செய்ய வேண்டும். இல்லையேல் அதுவே, எங்கள் சமயங்கள் மீது நம்பிக்கையீனங்களை உருவாக்கி விடும்.

தேர்த் திருவிழா என்றால் தேரின் ஓடுநிலை பற்றி துறைசார்ந்தவர்கள் மேற்பார்வை செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அதேநேரம் தேர், திருமஞ்சம் என்பவற்றை உருவாக்கும் சிற்பிகள் வெள்ளோட்டம் வரை தேரில் நின்று திருமஞ்சத்தில் ஏறி நின்று ஆணி அடிக்கும் அவசர வேலைகளைக் கைவிட்டு; திட்டமிட்டு வேலைகளைச் செம்மையாகப் பூரணப்படுத்தப் பழகிக் கொள்ளவேண்டும்.

வருமானம் மட்டுமே இலக்கு என்றால், இப்படியான தேர்ச் சரிவுகள்தான் இடம்பெறும். எனவே பரிபாலன சபைகள் அனைத்தும் விடயங்களிலும் கவனம் செலுத்துவது கட்டாயம் என்பதைத்தான் கலட்டி விநாயகர் காட்டி நிற்கின்றார் கவனம்.

# மூன்றாவது பாலினமாக திருநங்கைகளுக்கு அங்கீகாரம்

## இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

திருநங்கைகளை மூன்றாவது பாலினமாக அங்கீகரித்து, உச்ச நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்ப்பை வழங்கியது.

வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் திருநங்கைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன், சுகாதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்டவற்றை வழங்கி, திருநங்கைகளை சமூகத்தின் அங்கமாக கொண்டுவருவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் மத்திய, மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருநங்கைகளுக்கு தனி அடையாளத்தை அளிக்கும் வகையிலும், ஆண் - பெண்களுக்கு நிகராக சம உரிமை அளித்து, அவர்களை மூன்றாவது பாலினமாக அங்கீகரிக்கக் கோரி, தேசிய சட்ட உதவி ஆணையம் (NALSA) தொடர்ந்த பொதுநல வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கே.எஸ். ராதாகிருஷ்ணன் மற்றும் ஏ.கே.சிக்ரி ஆகியோர் அடங்கிய பெஞ்ச் அளித்த தீர்ப்பில், திருநங்கைகளை அங்கீகரிக்கும் வகையில், "ஆண்", "பெண்"ஆகியவற்றுக்குப் பிறகு "மூன்றாவது பாலினம்" என்ற தனிப் பிரிவை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"முற்கால சமூகத்தில் திருநங்கைகளுக்கும் உரிய மரியாதை வழங்கப்பட்டது. ஆனால், இன்றைய காலகட்டத்தில் அவர்களுக்கான அங்கீகாரம் பறிக்கப்பட்டு, அவர்களை சமூகத்தில் துன்புறுத்தும் நிகழ்வுகளும், பாரபட்சம் காட்டும் நிலையும் இருக்கிறது. மேலும், காவல்துறையினரும் இவர்களை தவறான கண் ணோட்டத்துடன் நடத்துகின்றனர்" என்று உச்ச நீதிமன்றம் கவலை வெளியிட்டுள்ளது.

மூன்றாவது பாலினமாக அங்கீகரிக்கப்படும் திருநங்கைகளுக்கு வேலை வாய்ப்பு, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளில் உரிய உரிமையை பெறுவதற்கு தேவையான வழிமுறைகள் பின்பற்ற வேண்டும்.

அத்துடன், திருநங்கைகளுக்கான சிறப்பு இடஒதுக்கீடு அளிக்கவும், பொருளாதாரம் மற்றும் சமூகரீதியில் அவர்களை பின்தங்கியவர்களாக அங்கீகரிக்கவும் மத்திய, மாநில அரசுகள் வழிவகை செய்ய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

திருநங்கைகளின் நலனைக் காக்கும் வகையில், சமூக நலத் திட்டங்கள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது மத்திய மற்றும் மாநில அரசுகளின் கடமை என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர். (எ-11)

## குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக வழக்கு தொடரப்படும்

### 500 சம்பவங்கள் விசாரணையில்

இணையக் குற்றச் செயல்கள் தொடர்பிலான 500 சம்பவங்கள் விசாரணை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

புலனாய்வுப் பிரிவினர் இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இணையக் குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் 5 வழக்குகள் ஏற்கெனவே தொடரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயர் நீதிமன்றில் ஐந்து சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மாவட்ட நீதிமன்றங்களில் 30 குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இணையத்தை பயன்படுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## திருக்கோவிலில் மஹா கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ சட்ட நாதர் சிவன் கோவிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சிவகாம சுந்தரி சமேத சிதம்பர நடராஜா பெருமான் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி 11 மணிவரை நடைபெறும்.

இந் நிகழ்வு பிரதமகுரு பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

எனவே அடியவர்கள் அனைவரையும் பங்கேற்று அருள் பெறுமாறு ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளார். (2)

## துறைமுக காவலாளி மீது மோதியது வாகனம்

வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் ஒன்று வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக நுழைவாயிலை உடைத்து கடமையில் இருந்த ஒருவர் மீது மோதியுள்ளது.

கொழும்பில் இருந்து பாசிக்குடா நோக்கி வந்த பஜ்ரோ ரக வாகனம் நேற்று முன்தினம் இரவு 12.45 மணியளவில் வாழைச்சேனை மீன் பிடித் துறைமுகவளைவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மீன் பிடித்துறைமுக நுழைவாயிலை உடைத்துக் கொண்டு உட்சென்றுள்ளது.

இச்சம்பவம் இடம்பெறும் போது வாகனத்தில் இருவர் இருந்ததாகவும் அவர்களுக்கு எந்த ஆபத்து இல்லை என்றும் மீன்பிடித் துறைமுகத்தில் இரவுக் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தில் வந்தவர்கள் மது அருந்தியிருந்ததாகவும் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். (2)

## பெரசிட்டமோல் உட்கொண்ட குழந்தை உயிரிழப்பு

அறியாமல் ஆறு பெரசிட்டமோல் வில்லைகளை உட்கொண்ட குழந்தை உயிரிழந்துள்ளது.

ராங்கல - கல்கொட்டுவ - வேரபிட்டிய பகுதியைச் சேர்ந்த குறித்த குழந்தை கடந்த 13ஆம் திகதி தெல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

பின் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த குழந்தை நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.

இரண்டரை வயதுடைய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

மருந்து வகைகளை சிறுவர்களின் பார்வைக்கு அல்லது கைக்கு எட்டும் தூரத்தில் வைக்க வேண்டாம் என சுகாதார அமைச்சு தொடர்ச்சியாக அறிவுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### உலகப் பற்றை விடுங்கள்



✦ மனிதனுக்கு எட்டுவித பந்தங்கள் இருக்கின்றன. அதை வெட்கம், வெறுப்பு, அச்சம், ஜாதிச்செருக்கு, வம்சவழிச் செருக்கு, சீலம், துயரம், உள்ளத்தில் ஒளித்துவைத்தல் என்பனவாகும். குரு கடாட்சமின்றி இவற்றை யாரும் விட்டு விட முடியாது.

✦ மலத்தில் உதித்து மலத்திலேயே வாழ்ந்துவருகிற புழு ஒன்று, சந்தனத்தில் எடுத்துவைத்தால் அது செத்துப் போகும். அதுபோன்று கலகப் பற்றுடைய ஒருவனை நல்லார் இணக்கத்தில் சேர்த்துவைத்தால் அவன் பெருந்துன்பத்துக்கு ஆளாவான்.

✦ உலக வாழ்க்கையில் சத்து ஒன்றும் இல்லை. ஆயினும் உலகப் பற்றுடையவன் அதைத் தெரிந்திருந்தும் அதை விட்டுவிடமாட்டான்.

✦ கயமையில் உழல்பவர்களுக்குக் கடவுள் விசுவாசம் வருவதில்லை. அவர்கள் எப்பொழுதும் சந்தேகப் பேர்வழிகள். ஆனால் சந்தேகம் யாருக்குமே அடியோடு அகன்று போவதில்லை. பிரம்மஞானம் அடைய பெற்றவனுக்குத்தான் சந்தேகம் ஒன்றும் வருவதில்லை.

✦ உலகில் பெரும் பற்றுதல் வைத்து சுக ஜீவனம் செய்து வருபவர்களிடம் உலகிலுள்ள கஷ்ட நஷ்டங்களைப்பற்றி மிகைபடப் பேசலாகாது.

✦ உலகப் பற்றுடையான் வெறும் பொய் வேஷக்காரன். கடவுளை நேசிப்பவன் போன்று அவன் பாசாங்கு பண்ணுகிறான். உண்மையின் சகலப் பொருட்களிடத்து தான் அவன் பற்றுதல் வைத்திருக்கிறான். ஈசனே அனைத்துக்கும் இறைவன் என்னும் மெய்ஞ்ஞானம் வரும் வரையில் மனிதனுக்குப் பிறவிகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

✦ ஒருவனுக்கு தேகாத்ம புத்தி இருக்கும்பொழுது பிறப்பு, இறப்பு, பிணி, துயரம், இன்பம், துன்பம் ஆகியவைகளைப் பற்றிய உணர்வு இருக்கிறது. ஆனால் ஆத்மாவோ இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org

# வலி. வலய பாடசாலைக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியன்





வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையிலான 19 வயது உதைபந் தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகியது.

வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த 8 , 9 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

முன்னதாக இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்த போதும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.

இதனால் போட்டி 0:0 என்னும் கோல் கணக்கில் நிறைவுற்றது. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப் பட்டது. சமநிலை தவிர்ப்பு உதைகளின் அடிப்படையில் 3:2 என்னும் கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றி பெற்று முதலாவது அணியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இடம்பெற்ற 2 ஆவது அரையிறு தியில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் தெல்லிப்பழை மகாஜணாக் கல்லூரியும் மோதியது.

இப் போட்டியில் ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத்திய வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் கோலொன்றினைப் பெற்றது. தொடர்ந்து இரு அணிகளும் கோல் பெற கடுமையாக முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை.

இதனால் போட்டியை 1:0 என்னும் அடிப்படையில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இறுதிப் போட்டிக்கு முன்னதாக இடம் பெற்ற 3 ஆம் இடத்திற்கான போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதியது.

இப் போட்டியில் 1:0 என்னும் கோல் கணக்கில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வெற்றி பெற்று 3 ஆவது இடத்தைக் கைப்பற்றியது. இடம் பெற்ற இறுதிப் போட்டியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியும் மானிப்பாய் இந்துக் கல் லூரி அணியும் மோதியது.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்த போதும் கோல்களை பெற முடியவில்லை. இதனால் முதற்பாதியாட்டம் எந்த வித கோல்களும் பெறாத நிலையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பமாகி சில நிமிட ங்களில் மானிப்பாய் இந்துக்கல்லூரி வீரன் கிடைத்த சந்தர்ப்பத்தை கோலாக்கினார்.

பதிலுக்கு வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி கோல்களைப் பெற முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை. இதனால் இப் போட்டியில் 1:0 என்னும் கோல் கணக்கில் வென்று வலிகாம வலய பாடசாகளுக்கிடையிலான 19 வயது உதைபந்தாட்டப் போட்டியில் மானிப் பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகியது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





**இலங்கை படையினருக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றபோது..**

# சண்டிலிப்பாய் பிரதேச இ.கழக பெண்களுக்கான கரப்பந்தாட்டம்

## பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி சம்பியன்







சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியின் இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் கழகமும் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலய இளைஞர் கழகமும் மோதியது.இப்போட்டியின் முதல் செட்டினை பண் டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் கழகம் 25:19 என்னும் புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

2 ஆவது செட்டினை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் கழகம் 20:25 என்னும் புள்ளிகள் அடிப்படையில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகா வித்தியாலய இளைஞர் கழகத்திடம் இழந்தது.

எனினும் சிறப்பாக ஆடிய பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் கழகம் 3 ஆவது செட்டினை 26:24 என கைப்பற்றி 2:1 செற்கள் அடிப்படையில் வென்றது.

இதன் மூலம் 2014 ஆம் ஆண்டுக்கான சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்ட சம்பியனாக பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் கழகம் தெரிவானது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.பி.எல் சீசன் 7

# இன்று கோலாகலமாக ஆரம்பம்

(அபுதாபி)

ஐபிஎல் கிரிக்கெட்டின் 7-வது சீசன் இன்று கோலாகலமாக ஆரம்பமாகிறது. உலக அளவில் கிரிக்கெட் மீது ரசிகர்களின் கவனத்தை திருப்பியதில் ஐபிஎல்லின் பங்கு அதிகம். 2008 முதல் ஆண்டு தோறும் ஏப்ரல். மே மாதங்களில் கோடை கொண்டாட்டமாக ஐபிஎல் சீசன் விருந்து படைத்து வருகிறது.

2014-ம் ஆண்டின் ஐபிஎல் 7-வது சீசன் இன்று ஆரம்பமாகிறது. இந்தியாவில் தேர்தல் நடப்பதால் இரண்டு கட்டமாக போட்டிகள் நடக்கின்றன. அதாவது முதல் கட்ட போட்டிகள் அபுதாபி. டுபாய், சார்ஜாவில் நடக்கின்றன. இன்று நடக்கும் முதல் போட்டியில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணி, கொல்கத்தா அணியை எதிர் கொள்கிறது.

முதல் 20 ஆட்டங்கள் இந்த நாடுகளில் நடக்கிறது. 2-வது கட்டமாக 21-வது ஆட்டத்தில் இருந்து இறுதி ஆட்டம் வரை இந்தியாவில் நடக்கின்றன. மொத்தம் 60 ஆட்டங்கள் நடைபெறுகிறது. ஜூன் முதலாம் திகதி மும்பையில் இறுதி ஆட்டம் நடக்கிறது. ஹைதராபாத் சன்ரைசர்ஸ். கொல்கத்தா. மும்பை இந்தியன்ஸ். சென்னை சுப்பர் கிங்ஸ். கிங்ஸ லெவன் பஞ்சாப். டெல்லி டேர்டெவில்ஸ். ராஜஸ்தான் ரோயல்ஸ், பெங்களூர் றோயல் சேலஞ்சர்ஸ் ஆகிய அணிகள் இந்த தொடரில் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் 2 முறை மோதும். இதில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணி அரையிறுதிக்குத் தகுதிபெறும்.




இதில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள், ஜூன் 1-ம் திகதி மும்பையில் சம்பியன் பட்டத்துக்கு மல்லுக்கட்டும். இந்தத் தொடரைப் பொறுத்தவரை டெல்லி அணியின் கப்டன் கெவின் பீட்டர்சன், கிங்ஸ் லெவன் பஞ்சாப் வீரர் செற்றேஸ்வர்புஜாரா, பெங்களூர்அணியின் யுவராஜ் சிங் (இந்த தொடரில் அதிக தொகைக்கு ஏலம் போன வீரர்), டெல்லி வீரர் தினேஷ் கார்த்திக் (இவர் அதிக தொகைக்கு ஏலம் போன 2-வது வீரர்), கொல்கத்தா அணியின் கப்டன் கௌதம் காம்பீர் ஆகியோர் உள்ளனர். இவர்களைத் தவிர அதிரடிக்கு கோரி அண்டர்சன், மக்ஸ்வெல், டு பிளசிஸ், டரன் சமி, ஹெயில், டேவன் ஸ்மித், தோனி, ரெய்னா, மக்கலம், டி வில்லியர்ஸ், ஹோலி, சேவாக் என மற்றொரு படை துடுப்பாட்டத்தில் விருந்து படைக்கத் தயாராக உள்ளது.

இதேபோல் சுழல் பந்தில் நரேன், அஸ்வின், மெண்டிஸ் ஆகியோரும் மிரட்டுவர். ஐபிஎல் சூதாட்டம் கடந்த ஆண்டு பரபரப்பை ஏற்படுத்தி தொடரை பஞ்சர் ஆக்கினாலும், பல நாட்டு வீரர்கள் ஒரே அணியில் சேர்ந்து விளையாடுவது கிரிக்கெட் ரசிகர்களுக்கு வரப்பிரசாதமான ஒன்றே. விமர்சனங்கள் விசனப்பட வைத்தாலும், இன்று தொடங்கி ஜூன் 1-ம் திகதிவரை கிரிக்கெட் ரசிகர்களுக்கு தினமும் இரவு விருந்துதான் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்றைய ஆரம்ப போட்டியியல் மும்பை - கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

நடப்பு சம்பியனான மும்பை அணி, இம்முறை ரோஹித் சர்மா தலைமையில் களமிறங்குகிறது.

அணியில் மைக்கல் ஹஸி, ராயுடு, பொல்லார்ட், கோரே அண்டர்சன் ஆகியோர் துடுப்பாட்டத்தில் மிரட்டுவர். பந்துவீச்சில் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் கலக்கிய மலிங்க, சாகீர் கான், பிரக்யான் ஓஜா, ஹற்பஜன் சிங் ஆகியோர் அசத்துவர். இதேபோல் கொல்கத்தா அணி கப்டன் கம்பீர் தலைமையில் களமிறங்குகிறது. அதிரடிக்கு உத்தப்பா, கப்டன் காம்பீர, கலிஸ், மணீஷ் பாண்டே, யூசுப் பதான், ஷகிப் அல் ஹசன் உள்ளனர். பந்துவீச்சில் மந்திரபோலர் சுனில் நரேன், வினய் குமார், பியூஸ் சாவ்லா, மோர்னே மோர்கல், உமேஷ் யாதவ் உள்ளனர். முதல் போட்டியில் முத்திரை பதிப்பது யார்? என்று இன்று தெரிந்து விடும். அபுதாபியில் இரவு 8 மணிக்கு போட்டி ஆரம்பமாகிறது. (க)

## ரசிகர்களின் மகிழ்வே ஐ.பி.எல்லில் முதல் இலக்கு டரன் சமி



ரசிகர்களை சந்தோஷப்படுத்துவது மட்டுமே ஐ.பி.எல் தொடரின் முதல இலக்கு என மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் டரன் சமி தெரிவித்துள்ளார். ரசிகர்களின் எதிர்பார்ப்பு அதிகமுள்ள 7-வது ஐ.பி.எல் தொடர் இன்று ஐக்கிய அரபு எமிரேட்சில் ஆரம்பமாகவுள்ளது.

இத்தொடர் குறித்து ஐதராபாத் அணியில் இடம் பெற்றுள்ள டரன் சமி கூறியதாவது, ஐபிஎல் தொடரில் விளையாட மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறேன். உலகில் உள்ள அனைத்து கிரிக்கெட் வீரர்களும் இத்தொடரில் பங்கேற்க விரும்புவார்கள். முதன்முறையாக ஐக்கிய அரபு எமிரேட்சில் நடக்கவுள்ள இந்த போட்டிகளுக்கு ரசிகர்கள் பேராதரவு தருவார்கள்.

இத்தொடர் ரசிகர்களை மகிழ்விப்பதற்காக மட்டுமே நடத்தப்படு கிறது, ஒவ்வொரு வீரரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, ரசிகர்களை மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும். சர்வதேச மற்றும் இந்திய வீரர்கள் இடம் பெற்றுள்ள ஐதராபாத் அணியில், நாங்கள் அனைவரும் ஒரு அணியாக இணைந்து வெற்றிக்கு போராடுவோம்.

கடந்த ஆண்டு இதேபோல ஒருங்கிணைந்து செயல்பட்டதால் நிறைய வெற்றிகளை பெற முடிந்தது என்று கூறியுள்ளார். (க)

## ஐ.பி.எல் கோப்பையை வெல்வோம்



## ஹோலி நம்பிக்கை

7-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இன்று அபுதாபியில் ஆரம்பமாகிறது. இதில் 8 அணிகள் பங்கேற்கின்றன. இந்தியாவின் முன்னணி வீரர் வீராட் ஹோலி தலைமையில் பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் அணி விளையாடுகிறது.

இந்த முறை கோப்பையை வெல்வோம் என்றும், பெங்களூர் அணி வலிமையாக உள்ளது என்றும் ஹோலி தெரிவித்தார். அவர் கூறியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் கோப்பையை வெல்ல முயற்சிகிறோம். இந்த முறை கண்டிப்பாக கோப்பையை வெல்வோம். பெங்களூர் அணி வலிமையாக இருக்கிறது. இந்த தடவை அணியில் அனுபவம் மற்றும் இளமை என சிறந்த கலவையாக உள்ளது. மேலும் திறமையாக சில வீரர்களும் வந்து உள்ளனர்.

அதை சரியாக பயன்படுத்தி கொள்ள முயற்சி செய்வோம். இந்த ஆண்டு பெங்களூர் அணியின் ஆண்டாக இருக்கும் என நம்புகிறேன். ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி, வீரர்கள் ரிலாக்சாகவும், உற்சாகமாகவும் விளையாட உதவிகரமாக இருக்கிறது. சர்வதேச கிரிக்கெட்டில் நெருக்கடிக்கு மத்தியில் விளையாடி விட்டு வரும் வீரர்கள் ரிலாக்ஸ் ஆகி விடுவார்கள் என்று இவ்வாறு அவர் கூறினார். (க)

## சர்வதேச...

தெற்காசியாவுக்கான அமெரிக்க உதவி ராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால் மற்றும் இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் இலங்கை தொடர்பில் ருவிட்டரில் கருத்துக்களை பரிமாறியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளிற்கான நோர்வேயின் விசேட தூதராக கடைமையாற்றிய எரிக் சொல்ஹெய்ம் தொடர்ந்தும் இலங்கை குறித்த விடயத்தில் தனது கருத்துக்களை வெளிப்படுத்தி வருகிறார். தற்போது பிரான்சில் சர்வதேச நிறுவனம் ஒன்றின் முக்கிய பதவியை வகிக்கும் அவருடன் பிஸ்வால் ருவிட்டரில் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான உதவி இராஜாங்க செயலாளராக பிஸ்வால் பதவியேற்ற பின்னர் கடந்த பெப்ரவரியில் இலங்கைக்கு சென்று திரும்பினார். இதன் தொடர்ச்சியாக அவர் இலங்கை விடயங்கள் தொடர்பில் கருத்தாடல்களில் ஈடுபட்டு வருகிறார். இந்தநிலையில் எரிக் சொல்ஹெய்முடன் அவர் டுவிட்டரில் கருத்துக்களை பகிர்ந்துள்ளார்.

இலங்கை விடயம் தொடர்பில் எரிக் சொல்ஹெய்முடன் கருத்து பகிரக் கிடைத்தமையை நல்ல சந்தர்ப்பமாக கருதுவதாக பிஸ்வால் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

இதன்போது கருத்துரைத்துள்ள எரிக் சொல்ஹெய்ம், இலங்கையின் அனைத்து சமூகங்களும் சமாதானமாக வாழ அமெரிக்காவும் பிஸ்வாலும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தமது ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை மீது சர்வதேச விசாரணையை கோரியுள்ளமை தொடர்பிலேயே இந்த டுவிட்டர் கருத்துப் பரிமாறல் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. (எ-11)

## முயற்சி...

பேராசிரியருமான சிவலிங்கம் சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எனக்கு இப்படியொரு வரவேற்பு யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் என்று நினைக்கவில்லை. இவ்வளவு பெருமைகளை நான் அடையக்காரணம் இந்த மண்கொடுத்த நம்பிக்கை தான் இந்த மண்ணில் பெற்றுக் கொண்ட அனுபவம் தான் அதற்கு காரணம். இங்குள்ள ஆசிரியர்கள் பாடசாலை சமூகத்தினர் கொடுத்த உச்சாகமும் முக்கியமாக அமைந்தன. உங்கள் வாழ்க்கையில் அடைய முடியாது என்ற நினைப்பை துூர வைத்துக் கொள்ளுங்கள். அடைய முடியாது என்ற வார்த்தைக்கு நான் எனது வாழ்க்கையில் இடம்கொடுப்பதில்லை. மனதில் எப்பொழுதும் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணம் வேண்டும்.

உயரமான மலை உச்சியை அடைய வேண்டும் என்றால் துூரத்தைப்பார்த்து பயப்படக் கூடாது. நடக்காது எனவும் நடந்து போகும் போது விழுந்துவிடுவோம் என்றும் பயப்படக்கூடாது. இந்த மன உறுதியை நான் இங்கு இந்த மண்ணில் தான் கற்றுக்கொண்டேன். மலை உச்சியை அடைய முடியும் என்ற உறுதியான மனம் வேண்டும். நம்பிக்கை வைக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கல்விதான் முக்கியமாகவுள்ளது. இங்குள்ள ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரையும் தங்கள் பிள்ளைகளாக பார்க்கின்றனர். என்னையும் அவ்வாறு தான் பார்த்தார்கள். நான் உயர்தரம் படிக்கும் போது எதிர் காலத்தில் என்னவாக வரப்போகின்றேன் என்று எண்ணவில்லை. மனது வைத்தால் அதை முடிக்க வேண்டும். விருப்பமானதை அடைய முயற்சிக்க வேண்டும். எதையும் செய்ய முடியாது என்பதை உங்கள் [வாழ்க்கையிலிருந்து அகற்றிவிடுங்கள் என அவர் மேலும் தெரிவி]த்தார். (செ-11)

## காணாமல்...

குடும்ப உறுப்பினர்கள், அவர்களின் இறப்பு சான்றிதழை ஏற்க மறுத்து வருகின்றனர். இதனையடுத்து அவர்களுக்கு ஆலோசனை வழங்க உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

காணாமல் போனவர்கள் பற்றிய ஆதாரங்கள் குறைவாக இருந்தபோதிலும் ஆணைக்குழு அவர்களைக் கண்டுபிடிக்கும் என மக்கள் நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நடத்திய விசாரணையில், மக்கள் நல்ல மன நிலையில் இல்லை எனவும், சில குடும்பங்களில் 9-10 நபர்கள் காணாமல்போனதால் அக்குடும்ப உறவினர்கள் அதிர்ச்சியில் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் கலந்துரையாடியதை அடுத்து, குடும்ப மக்களுக்கு ஆலோசனை முகாம் நடத்த உள்ளதாக அவர் குறிப்பிட்டார். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Print your Building Plans in A1 & A2 sizes
LEYDEN PRINTS
Registered with Municipal & Urban Councils
We Specialize in 3D Drawings, Designs & Estimates

No.472, Main Street, Chundikkuli, Jaffna.
Tel/Fax:-021 222 1851 Hot Line:-0777 320 799, 07755 6 99 77
(6079)


## மலே.பிரதமரு...

கோத்தபாய மற்றும் அவரது குழுவினருடன் சுமார் 30 நிமிடங்கள் இடம்பெற்ற இப்பேச்சு வார்த்தை தொடர்பான மேலதிக தகவல்கள் உடனடியாக கிடைக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

மலேசிய மண்ணில் விடுதலைப் புலிகளின நடவடிக்கைகளுக்காக வேலை செய்பவர்களைக் கைது செய்ய மலேஷியா, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து நெருக்கமாக பணியாற்றி வருகிறது.

அண்மையில் திரையிடப்படவிருந்த சனல்-4லின் இலங்கையின போர்க்குற்றம் தொடர்பான காணொளி திரையிடப்படுவதை மலேசிய அரசாங்கம் தடை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Swiss, Belgium செல்வோர் பெற்றுக் கொள்ளலாம்... 790 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: 2006ம் ஆண்டிலிருந்து யாழில் French கற்பிக்கும் ஒரே ஒரு ஆசிரியர்..
ஆரியகுளம் Vista Vison Studio க்கு அருகாமை, Nelliady இல் மட்டுமே Classes...
ஆரம்பம்:19.04 Sat 10.30am No. 40, Palaly Road, Jaffna.
ஆரம்பம்: 22.04 Tue 11am. No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 456


## சர்வதேச விசாரணைக்கான...

வில்லியம் ஹேக் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இந்த விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பில் நவநீதம்பிள்ளை வாய்மூல அறிக்கையை எதிர்வரும் செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைப்பார். இதன் பின்னர் 2015-ம் ஆண்டு மார்ச்சில் முழு அறிக்கையை அவர் சமர்ப்பிப்பார் என்றும் வில்லியம் ஹேக் குறிப்பிட்டார். இந்தநிலையில் பிரித்தானிய அரசாங்கம், நவநீதம்பிள்ளையின் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவையும் வழங்குவதாக ஹேக் தெரிவித்தார். கடந்த மார்ச் 27-ம் திகதியன்று இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை கோரும் அமெரிக்க யோசனை நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## தமிழர்மீதான கெடுபிடி அர...

தரப்பு கெடுபிடிகளை முன்னெடுக்கும் முயற்சிகள் தென்படுகின்றன. இந்த முயற்சிகளின் பின்னால் உள்ள அரசாங்கத்தின் கட்சி அரசியலை சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மிகத்தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

இதன்மூலம் சிங்கள மக்கள் மத்தியில் சரியும் செல்வாக்கை நேர்படுத்த அரசு திட்டம் போடுகிறது. இந்த புலி பூச்சாண்டி அரசியலை தொடர விட்டால் அது இந்நாட்டில் சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிரணி கட்சிகளுக்கு கூட தமது ஜனநாயக அரசியலை செய்யமுடியாத நிலைமையை உருவாக்கிவிடும்.

புலிகள் இயக்கத்தை மீண்டும் உயிர்பிக்க வேண்டிய அரசியல் சூழல் தமிழ் மக்கள் மத்தியில் இன்று கிடையாது. ஐக்கிய இலங்கைக்குள் தமது தேசிய அரசியல் உரிமைகளை பேச்சுவார்த்தை, ஜனநாயக போராட்டங்கள், சர்வதேச நகர்வுகள் மூலமாகவே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைபாட்டில் இன்று தமிழ் மக்கள் திடமாக இருககின்றார்கள். தலைநகர் மாவட்டத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்புள்ள கட்சி என்ற முறையில் இந்த கருத்துகளை உங்களிடம் எடுத்து சொல்லும் கடப்பாடு எங்களிடம் இருக்கிறது.

### சிங்கள மக்கள் மத்தியில் எடுத்து கூறுங்கள்

அதேபோல்இது பற்றிய உண்மை நிலைவரங்களை சிங்கள மக்கள் மத்தியில் எடுத்து கூறும் பொறுப்பு சிங்கள மக்களை பிரதானமாக பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுக்கு இருக்கின்றது. அதை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என நாம் கேட்டுகொள்கிறோம் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், ஜனநாயக கட்சி தலைவர் பொன்சேகாவிடம் தெரிவித்தார்.

புலி உறுப்பினர்கள் என சொல்லப்பட்ட சிலர் கண்டுபிடிக்கப்பட்டு, பின்னர் கொல்லப்பட்ட சம்பவங்கள் மக்கள் மத்தியில் பலதரப்பட்ட கேள்விகளை எழுப்பியுள்ளன. இந்த புதிய சூழல் மீண்டும் பழைய கெடுபிடி சூழலை உருவாக்கிவிடுமோ என தமிழ் மக்கள் சிந்திக்க தொடங்கியுள்ளார்கள்.

வெளிப்படைதன்மையற்ற செய்திகள் காரணமாக, சிங்கள மக்கள் மத்தியிலும் இச்சம்பவங்கள் பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளன. இந்த புலிகள் மீண்டெழுந்து வந்து விட்டார்கள் என்ற விடயம் தொடர்பாக அரசாங்கம் இந்நாட்டு மக்களுக்கு மேலும் விளக்கங்களை தருவதற்கு கடமைபட்டுள்ளது. எனவே இது தொடர்பில் தேசிய சிங்கள கட்சிகள் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்ப வேண்டும்.

### செல்வாக்கு குறைகிறது

மேல்மாகாணத்திலும், தென் மாகாணத்திலும் நடந்து முடிந்த மாகாணசபை தேர்தல்களில் அரசின் செல்வாக்கு குறைந்து வருவது தெரிகிறது. ஏறக்குறைய 250,000 வாக்குகள் அரசுக்கு குறைந்துள்ளன.

ஜெனிவா மனித உரிமை பேரவை கூட்ட தொடர் வேளையில் திட்டமிட்டு இங்கு தேர்தல்கள் நடைபெற்றாலும், ஜெனிவா மனித உரிமை பேரவையுடன் தொடர்புபடுத்தி அரசு எழுப்பிய பிரசாரத்தை சிங்கள மக்கள் கணக்கில் எடுக்கவில்லை. கடந்த காலங்களை போல் அல்லாமல் இந்தமுறை 'சர்வதேச சதி' என்ற அரசு தரப்பு பிரசாரம் புஸ்வாணமாகிவிட்டது என்பது புலனாகிவிட்டது.

ஆகவேதான் ஜெனிவாவை விட்டுவிட்டு இங்கே வடக்கில் மீண்டும் புலிகள் வந்து விட்டார்கள் என்ற பிரசாரத்தை அரசு கையில எடுத்துள்ளதா என்றும், இதன்மூலம் சிங்கள மக்களின் மனதை வென்று தனது செல்வாக்கை தக்க வைத்து கொள்ள இந்த அரசு முயற்சி செய்கிறதா என்றும் கேள்விகள் தென்னிலங்கையிலே எழுந்துள்ளன.

தென்னிலங்கை பெரும்பான்மை தேசிய கட்சிகளின் அரசியல் நடவடிகைகள் கடைசியில் தமிழ் மக்களின் தலையில்தான் வந்து விடிந்துள்ளன. இதுவே கடந்த கால வரலாறு. எனவே மேல்மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளை பெற்றுள்ள பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற முறையில் நாம் இது தொடர்பாக கரிசனை கொண்டுள்ளோம். ஆகவேதான் இத்தகைய நேரடி சந்திப்புகளை நடத்த நாம் முடிவு செய்துள்ளோம்.

### தொடரும் கைது மக்கள் அச்சம்

இந்த புலி பிரசாரத்தை முன்நிறுத்தி பரவலாக நாடு முழுக்க கைதுகள் இடம்பெற்றுள்ளன. கொழும்பிலும் இடம்பெற்றுள்ளது. மீண்டும் பழைய சோதனை சாவடி காலகட்டம் வந்துவிடுமோ என கேள்விகள் எழுகின்றன.

ஆயுத கலாசார நோக்கங்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் இடம் இல்லை, இந்நிலையில் மீண்டும் கெடுபிடி யுகத்துக்குள் பிரவேசிக்க தமிழ் மக்கள் தயார் இல்லை என்ற செய்திகளை பெரும்பான்மை கட்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்.

இந்த வரிசையில் ஏனைய தென்னிலங்கை பெரும்பான்மை கட்சிகளையும் சந்தித்து இது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை நிர்வாக செயலாளர் பிரியாணி குணரட்னவும், உப செயலாளர் சண். குகவரதனும் செய்துவருகின்றனர் என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (எ-11)

## பொதுநலவாய நிதியில்...

ணக்க முயற்சிகளை மழுங்கடிக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கை மக்கள் மீதான அக்கறையை கனடா கேள்விக்கு உட்படுத்தியுள்ளது என்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை அரசாங்கம் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளூரில் விசாரணைகளை குறிப்பிட்டகால அவகாசத்தில் மேற்கொள்ளும் என்று வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது. (எ-11)


### பெயர் மாற்றம்

முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி மாடசாமி புஸ்பராணி ஆகிய நான் எனது பிறப்புச்சான்றிதழ் இலக்கம் 3725 இன்படி எனது பெயர் மேரியோசெவின என பதியப்பட்டுள்ளது. ஆனால் பிறப்பில் இருந்து இன்றுவரை என் சகல சட்ட ஆவணங்களிலும் புஸ்பராணி எனும் பெயரையே வழக்கத்தில் பயன்படுத்தி வருகிறேன். இப் பெயரையே இன்றிலிருந்து இனி வருங்காலங்களிலும் பயன்படுத்திக் கொள்வேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வாழ் மக்களுக்கு இத்தால் சகலருக்கும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

தகவல் :- திருமதி மாடசாமி புஸ்பராணி
கள்ளப்பாடு தெற்கு, முல்லைத்தீவு. (C-7035)






COURSE CONTENTS:
- Fundamentals of Drafting
- Introduction to AutoCAD
- Getting Started
- Organizing Your Project
- Using Coordinate System
- Creating Object
- Drawing with Precision
- Controlling the Drawing Display
- Using Layers, Colors and Line-Type
- Adding text to Drawing
- Dimensioning and Tolerance
- Layout and Plotting
- 2D Projects
- Working in Three – Dimensional
- Space (3D)
- Creating Three Dimensional Image
- Using Raster Images
- 3D projects

மேலதிக விபரங்களுக்கு: 071 777 5333
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel: 021 222 8060 Web : www.iis.edu.lk
(C-7030)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை சமாதான நீதவான்

மாணிக்கவாசகர் விஜயகுமார்



முல்லைத்தீவு செம்மலையை பிறப்பிடமாகக் கொண்ட மாணிக்கவாசகர் விஜயகுமார் அகில இலங்கை சமாதான நீதவானாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா முன்னிலையில் 20.02.2014 அன்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் செம்மலை மகா வித்தியாலயம்,வித்தியானந்த கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், வவுனியா விவசாயத்திணைக்களத்தின் ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தரும், கொக்கிளாய் மேற்கு, செம்மலை ஆகியவற்றின் முன்னாள் கிராமசேவையாளரும் கொக்கிளாய் ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் முகாமையாளரும் தலைசிறந்த சமூக சேவையாளருமாவார்.முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு மேன்மேலும் சேவைகள் செய்து நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

தகவல் :- மா.அபிமன்னகுமார்
குடும்பத்தினர்
செம்மலை.
(C-7034)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org